இராம் சரண் சர்மா

# இடைக் காலத்தின் முற்பகுதியில்

## இந்தியாவில் ஏற்பட்ட

# சமூக மாறுதல்கள்

Y744
NT9
113791

தேவராஜ் சுறை நினைவு முகச் சொற்பொழிவு 1969

# இடைக்காலத்தின் முற்பகுதியில் இந்தியாவில் ஏற்பட்ட சமூக மாறுதல்கள்

# இடைக்காலத்தின் முற்பகுதியில் இந்தியாவில் ஏற்பட்ட சமூக மாறுதல்கள்

(கி.பி. 500—1200)

பேராசிரியர் இராம் சரண் சர்மா,
வரலாற்றுத்துறைத் தலைவர், பாட்னு பல்கலைக் கழகம்.

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை—600098.

முதற் பதிப்பு: ஜனவரி, 1979

© இந்தியன் கவுன்சில் ஆஃப் ஹிஸ்டாரிகல் ரிசர்ச்

Social Changes in Early Medieval India

*by*

R. S. Sharma

தமிழாக்கம்

ந. க. மங்கள முருகேசன், எம். ஏ.

விலை: ரூ. 2-00

இந்தியன் கவுன்சில் ஆஃப் ஹிஸ்டாரிகல் ரிசர்ச்சின்
ஆதரவில் வெளியிடப்பட்டது.

மத்திய அரசு சலுகை விலையில் வழங்கிய
அச்சுத் தாளினால் இப்புத்தகம் அச்சாகியது.
அச்சிட்டப் பிரதிகள்: 1,100

அச்சிட்டோர்:
நியூ செஞ்சுரி பிரிண்டர்ஸ்,
சென்னை—98.

தேவராஜ் சஞ நினைவுச் சொற்பொழிவு வரிசையில் முதற் சொற்பொழிவினை நிகழ்த்துவதற்கு என்னை அழைத்ததை எனக்கு வழங்கப்பட்ட தனிச் சிறப்புரிமை யாகவும், பெருமையாகவும் கருதுகிறேன். ஹரித்துவாரில் மரபு வழியே ஸம்ஸ்கிருதத்தைக் கற்ற சஞ தன்னுடைய முறையான கல்வியினைப் பாரிசில் கற்ருர். மரபு வழியிலானதும் நவீனமானதுமான பண்பாடுகளில் நல்ல கருத்துக்களை ஏற்றுக்கொண்ட அவர் அவற்றினை அறிந்து தெளிந்திடச் சொற்பொழிவுகளையும், வெளியீடுகளையும் அளித்தார். தேசிய, முற்போக்கு இயக்கங்களில் பங்கு கொண்டமையால் அவரால் அக் கல்விக்கு உண்மையான வடிவத்தை அளிக்க முடிந்தது. ஸம்ஸ்கிருதம், இந்தி, பஞ்சாபி, வங்காளி ஆகிய மொழிகள், சமுதாய, பொருளாதார வரலாறு, சமூக, மனித இன ஆராய்ச்சி போன்றவற்றில் அவர் ஆர்வம் செலுத்தினர். இயல்பாகவே திறமையுள்ள அயல்மொழி வல்லுனரான அவர் பல்வேறு மொழிகளில் நயத்திறத்துடன் எழுதினர். **பண்டைய இந்தியாவில் அடிமை முறை** என்ற நூலினைப் பிரெஞ்சு மொழியில் எழுதி ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இரஷ்ய மொழியிலும் அந்நூல் ஆக்கப் பட்டது.

தேவராஜ் சஞ ஈடுபாடுடைய ஆசிரியராகவும், சிறந்த கல்வியாளராகவும் விளங்கினர். அவருடைய குடும்பத்தவர்கள் ஓரளவிற்கு வணிகத்தில் சிறப்புப் பெற்றிருந்தாலும் தம் முன்னோர் தொழிலில் ஆர்வம் கொள்ளாது ஆசிரியராவதையே அவர் விரும்பினர். கல்வி நிலை வரிசையில் அவருக்கு உரிய இடம் வழங்கப் படாவிடினும் சிறந்த கல்வியை மாணவர்களுக்கும், உடனுழைப்பவர்களுக்கும் அளித்தார். டெல்லிப் பல்கலைக் கழகம் அதன் வளர்ச்சியைத் திட்டமிடுவதில் மதிப்பு வாய்ந்த சேவையை சஞவிடமிருந்து பெற்றது.

இந்த முதல் நினைவுச் சொற்பொழிவிற்கு டாக்டர் சி. டி. தேஷ்முக் தலைமை வகிப்பது மிகவும் பொருத்த மானது. ஏனெனில் இவருடன் இப் பணியில் அவர் தொடர்பு கொண்டதுமன்றி இவரின் கீழ் ஆசிரியராகவும் பணி புரிந்தார்.

தேவராஜ் சனுவின் அறிவுத் திறமுடைய படைப் புக்களைக் குறித்துப் பரப்பப் பாண இயலாது. ஆனல் அவருடைய ஆழ்ந்த விளக்கத்தையுடைய பண்டைய அடிமைமுறை என்பது குறித்து உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். அப்படைப்பு அடிமைகள் குறித்துப் பயன்படுத்தப்பட்ட பாலி, வடமொழிச் சொற் கூறுகளின் கவனமான ஆராய்ச்சியும் அவற்றைத் திறம்பட ஒன்று சேர்த்துத் தொகுக்கப்பட்டமையால் கிடைத்த குறிப்பிடத்தக்க பண்டைய இந்தியாவின் சமூக அமைப்பும் குறித்த படைப்பும் ஆகும். குப்தர் களுக்குப் பிற்பட்ட கால ஆராய்ச்சியினைத் தொடர சனு இல்லாமல் போனது வருந்தத்தக்கது. அவருடைய காலத்தில் ஏற்பட்ட சமூக மாறுதல்கள் குறித்த விவாதமே அவருடைய நினைவிற்கு அளிக்கும் சிறந்த பாராட்டுச் சின்னம் ஆகும்.

# இடைக்காலத்தின் முற்பகுதியில் இந்தியாவில் ஏற்பட்ட சமூக மாறுதல்கள்

## கட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரம் ஒன்றுகூட்டும் நிலையின்மை

**சி**ல பொருளாதார முன்னேற்றங்கள் பண்டைய இடைக்கால இந்தியாவின் சமூக மாறுதல்களுக்குப் பின்னணியை அளித்தன. நிலவருவாய், நிலம் ஆகியவற்றை சமயத் துறையினருக்கும், மற்றவர்களுக்கும் அரசர்களும் அவர்களுடைய சிற்றரசர்களும் அளித்ததே இக்காலப் பொருளாதாரத்தில் மிகவும் குறிப்பிடத் தகுந்த மாறுதலாகும். செப்புப்பட்டயங்களில் காணப்படும் ஆவணங்கள் இதற்குச் சான்று பகர்கின்றன. அவை கிராமங்களையும் பொருளாதார, ஆட்சித்துறை காப்புரிமைகளையும் தொடக்க காலத்தில் புரோகிதர்களுக்கும், பிற்காலத்தில் சிற்றரசர்களுக்கும், அதிகாரிகளுக்கும் அளித்தன. வட இந்தியாவில் குறிப்பாக இராசபுத்திர அரசுகளில் பதினொன்று பன்னிரண்டாம் நூற்றுண்டுகளில் குடியாட்களுக்கும், அலுவலர்களுக்கும், கிராமங்களும், நிலவருவாயும் அளிக்கப்பட்டன.[1] தக்காணத்திலும், தென்னிந்தியாவிலும் இராணுவப் பணிகளுக்காக அவர்களுக்கு கிராமங்கள் ஒதுக்கித் தரப்பட்டன. எண்ணிறந்த சிற்றரசுகளாக நாடு பாலர்கள், பிரதிகாரர்கள், இராட்டிரகூடர்கள் ஆகியோரின் வீழ்ச்சிக்குப் பின்னர் பிரிக்கப்பட்டாலும் நிலக்கொடை முறையானது இந்தச் சிற்றரசுகளில் கூட அரசின் அதிகாரத்தை வலுவற்றதாகச் செய்தது. மானியதாரர்களுக்குப் பொருளாதார, ஆட்சித்துறை சுயாட்சி வழங்கப்பட்ட தன் விளைவாக மைய அரசுக்கும், உள்ளூர் மானியதாரர்களுக்குமிடையே இருந்த பொருளாதார அரசியல் உறவு அறுபட்டது. இதன் விளைவாக அவர்களுக்குள்ளேயே எண்ணிறந்த பொருளாதார ஆட்சித்துறைத் தீவுகள் தோன்றி வாய்ப்புகள் ஏற்பட்டன. இத்தகைய பொருளாதாரப் பிரிவுகளின்

அளவை துணைமானிய அளிப்பு குறைத்ததன் விளைவாக சமப் பங்கீடில்லாத நிலம், நிலவருவாய் ஆகியவைகளின்அடிப்படையிலான, ஒரு வகையான சமுதாயப் படிநிலை அமைப்பின் வளர்ச்சிக்கான சூழ்நிலைகளை உருவாக்கியது.

அவற்றில் சேர்க்கப்படாத ஒரு கிராமத்தின் அல்லது கிராமங்கள் பல சேர்ந்த கூட்டத்தின் ''தனித்தன்மை'' இக்காலத்தில் வாணிபத்தின் வீழ்ச்சியினால் வலிமை பெற்றது. ரோமானியப் பேரரசின் கீழைப்பகுதிக்கு இந்தியா வாசனைப் பொருட்கள், பட்டு, விலையுயர்ந்த உலோகங்களை முதல், இரண்டாவது நூற்றுண்டுகளில் ஏற்றுமதி செய்தபோது, சுமார் நூறு ஆண்டுகள் இந்திய அயல்நாட்டு வர்த்தகத்தில் முழு வளர்ச்சிக் காலம் நிலைபெற்றது. கி. பி. ஆரும் நூற்றுண்டின் இடைப்பட்ட காலம் வரை இந்தியப் பட்டு பைசான்டியத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுவது தொடர்ந்தது. ஆனுல் சீனர்களிடமிருந்து பட்டுப் புழுக்களை வளர்ப்பதைப் பைசான்டியர்கள் கற்றுக் கொண்ட பின்னர் இந்தியாவிலிருந்தோ, சீனுவிலிருந்தோ, பட்டு இறக்குமதி செய்வது அவர்களுக்குத் தேவையில்லாமல் போயிற்று.[2] இந்தியாவின் கடற்கரைப் பகுதிகளில் வர்த்தகம் ஓரளவிற்குத் தென்கிழக்கு ஆசியாவுடனும், சீனுவுடனும் சிறிது நடைபெற்றுலும் இந்திய உள்நாட்டுப் பொருளாதாரத்தில் அஃது சிறிதளவே விளைவுகளை ஏற்படுத்தியது. ஆனுல் வாணிபத்தின் மொத்த வீழ்ச்சி கடற்கரை நகரங்களுக்கும், நாட்டினுள்ளிருந்த நகரங்களுக்குமிடையேயும் நகரங்களுக்கும் கிராமங்களுக்குமிடையேயும் இருந்த பொருளாதார இணைப்பைப் பலவீனப்படுத்தியது.

இக்காலத்தில் காசுகள் காணப்படாமை வாணிப வீழ்ச்சியினைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. பாலர்கள், கூர்ஜர பிரதிகாரர்கள், இராஷ்டிர கூடர்கள் தொடர்ந்து மூன்று நூற்றுண்டுகளும் அதற்கு மேலும் தென் இந்தியக் கோடிப் பகுதி தவிர்த்த இந்தியா முழுவதும் ஆட்சி செலுத்திய போதிலும் அவர்களுக்குரியன என உறுதியாகக் கூறிடத்தக்க காசுகள் ஏதுமில்லை. குப்தர் காலத்திற்கு பிற்பட்ட காலத்தில் தங்கக் காசுகள் எந்த அளவிற்குக் காணப்படவில்லையோ அதற்கு எதிர்மாருகக் குஷானர் காலத்திலும் குப்தர்கள் காலத்திலும் ஏராளமாகக் கிடைத்திருக்கின்றன. உண்மையாக காசுகள் ஏதுமில்லாமையால் இடைக்கால அரசுகளின் பட்டயங்களில் காசுகள் குறித்துப் பெருமளவில் குறிப்பிட வாய்ப்பில்லாது போயிற்று. களச்சூரிகள், சாந்தேலர்கள், காகதவாலர்கள் போன்றேர் தங்கக் காசுகளை மீண்டும் பதினென்று, பன்னிரண்டாம் நூற்றுண்டுகளில் கொண்டு வந்தபோதிலும் சிறிய அளவிலேதான் கொண்டு வந்தனர். எப்படி

யிருந்தபோதிலும் கி. பி. 650–1,000க் காலத்தில் இக்காசுகள் இல்லாமை வெளிப்படையாகத் தெரிந்தது. உள்நாட்டு, வெளி நாட்டு வாணிபத்திற்கு இடையூருக அமைந்ததுமில்லாமல் கிராமங்களைத் தங்கள் தேவைகளைத் தாங்களே தனியாகவோ கூட்டமாகவோ நிறைவேற்றிக் கொள்ளக் காசுகள் இல்லாமை யால் நிலைமை ஏற்பட்டது, வெளிப்படையாகவே தெரிகிறது. ஏராளமான அரசுகள் இருந்ததால் சுங்கச்சாவடிகளில் சுங்கம் செலுத்த வேண்டுமென்று பொருள்படும். இது மேலும் வாணிபத் திற்கு கேடு செய்வித்தது. 'சுல்க'[3] என்ற சுங்கம் செலுத்தாது காடுகள் வழியேயே சென்ற வாணிகர்கள் குறித்துக் கதாசரித் சாகரம் கூறுகின்றது.

வாணிபம், வர்த்தகம் ஆகியவற்றின் வீழ்ச்சி கைவினைஞர் களையும், வாணிகர்களையும் நாட்டின் ஒரு பகுதியிலிருந்து மற்ருெரு பகுதிக்குச் செல்வதை உண்மையில் தடை செய்வித்தது. கைவினைஞர்களின் பணியின் தேவையினை வேண்டியிருந்த உண்மை யான நாட்டுப்புற நிறுவனங்கள் அழிந்தன. அவற்றின் இடத் தினைப் பெரிதும் வணிகத்திற்குப் பயனிலாத ஸ்கந்த வாரங்கள் நிலமானிய நீதிமன்றங்களில் இராணுவ, ஆட்சித்துறை நிலையங்கள் ஆகியவை எடுத்துக் கொண்டன. கைவினைஞர்கள் அவர்கள் வாழ்ந்த கிராமங்களிலோ அல்லது நகரங்களிலோ, அங்கு இருந்த உள்ளூர் வாடிக்கையாளர்கள் அல்லது எஜமானர் களுக்குத் தடையின்றிப் பணி புரிந்திடத் தம்மை இணைத்திட வேண்டியதாயிற்று. மானியதாரர்களுக்குக் கிராமங்களை அளித்த போது இயல்பாக அக்கிராமத்தைச் சார்ந்தவர்களான கைவினை ஞர்களும் மான்யதாரருடைய ஆணையினை நிறைவேற்றுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். அவர்கள் கிராமத்தில் வசித்திடா விட்டால் இது இயலக் கூடியதன்று. சமுத்திர குப்தருடையவை எனக் கருதப்படுகின்ற கி. பி. ஏழாம் நூற்ருண்டைச் சார்ந்த இரண்டு போலிப் பட்டயங்களில் உழவர்களையும், கைவினைஞர் களையும் கிராமத்தினைவிட்டு நீங்கவேண்டாமென்றும், இறையிலி கிராமங்களில் குடியேற[4] வேண்டாமென்றும் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது. சில சாந்தேலர்களின் பட்டயங்களில் அவர்கள் வசித்த கிராமங்களுடன் மான்யதாரரிடம் மாற்றப்பட்ட பல்வேறு பிரிவினைச் சேர்ந்த கைவினைஞர்களின் பெயர்கள் குறிப்பிடப் பட்டுள்ளன.[5] தக்காணத்திலும், தென்னிந்தியாவிலும் கோவில் களுக்கும், மடங்களுக்கும்[6] கைவினைஞர்கள் அமர்த்தப்பட்ட ஏராளமான சம்பவங்கள் நமக்குக் கிடைக்கின்றன. மேலைத் தக்காணத்தில் கடற்கரைப் பகுதியில் அவர்கள் வணிகச் சங்கங் களுக்கும் மாற்றப்பட்டுள்ளனர்.[7]

மான்யதாரர்களிடத்து நிலத்துடன் வணிகர்கள் மாற்றப்பட்டனர் என்பதற்காக என்ற தெளிவான குறிப்புகள் இல்லையாயினும் இடைக்காலக் கைவினைஞர்கள் பொருட்களை உற்பத்தி செய்து விற்றவர்களினின்றும் பெரிதும் வேறுபட்டவர்கள் அல்லர். கடல் பயணத்திற்கு விதிக்கப்பட்டிருந்த தடை பெரிதும் வாணிகர்களைப் பாதித்திருக்கக் கூடும். இவ்விதி பின்பற்றப் பட்டிருக்கவில்லையாயினும் இது அக்காலப் பொருளாதார மந்தத்தையே எதிரொலிக்கிறது. மேற்கு தக்காணத்தில் கிடைத்துள்ள 6–8 ஆம் நூற்றுண்டைச் சார்ந்த பட்டயங்கள் சிலவற்றில் வணிகர்கள் நகரத்தில்[8] ஒரே அங்காடியில் கூடுவதை அனுமதிக்கவில்லை அது போட்டி ஏற்படுவதைத் தடுத்ததோடு, நீக்கியதோடு வணிகர்களின் வட்டாரப் பண்பு வளர வழி கோலியது.

நிலப்பட்டயங்களின் வாசகங்களில் பொதுவாகக் கிராமத்தவர்களை எல்லாப் பாக்கிகளையும் மான்யதாரருக்குச் செலுத்தி அவருடைய ஆணையை நிறைவேற்றுமாறு கேட்டுக் கொள்ளப் பட்டிருப்பதிலிருந்து தானமாக அளிக்கப்பட்ட பகுதியிலேயே தங்கிடுமாறு உழவர்கள் எதிர்பார்க்கப்பட்டனர் என யூகிக்கலாம். கி. பி. ஆரும் நூற்றுண்டிலிருந்து ஒரிஸ்ஸா, தக்காணம் போன்ற பின்தங்கிய மலைப்பாங்கான பகுதிகளில் நிலங்களோடு இணைக்கப் பட்டிருந்த பயிர்ப் பங்கீடுதாரர்கள், உழவர்கள்[9] அப்பகுதியுடன் இணைந்து வாழுமாறு முக்கியமாக அறிவிக்கப் பட்டனர். ஒரு தடவை இப்பழக்கம் நில உரிமையாளர்களால் பயனுடையது எனக் கருதப்பட்ட பின்னர், நிலையான வேளாண்மைத் துறையில் முன்னேற்றம் பெற்ற பகுதிகளில் இதனை அறிமுகம் செய்தனர். வட இந்தியாவில் பல நிலப்பட்டயங்கள் நிலத்துடனேயே உழவர்களையும் மான்யதாரர்களுக்கு தெளிவாக மாற்றுகின்றன. அந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட சொற்கூறுகள் தன-ஜன-சஹிதா,[10] ஜனதா ஸம்ருத்தா[11] அல்லது ஸா-பிரதிவாசி ஜன-ஸமேதா[12] ஆகும். உழவர்களுக்கும், கொடையாகப் பெற்றவர்களுக்குமிடையே உள்ள உறவு தெளிவின்றியிருப்பதை நீக்குவதற்காகவே இது செய்யப்பட்ட போதிலும், கிராமப் பொருளாதாரத்தில் நிலவிவரும் நிலையைப் பாதுகாத்ததே இதனுடைய முக்கிய விளைவு ஆகும்.

உழவர்கள், கைவினைஞர்கள், வணிகர்கள் தங்கள் தங்கள் உறைவிடங்களில் பிணைக்கப்பட்டிருந்தமையால், கட்டுப்படுத்தப் பட்ட பொருளாதாரத்தை வளரச் செய்து வலுவுள்ள ஒரு வகையான வட்டாரப் பண்பூட்டத்தை ஊக்குவித்தது. அவர்களுடைய ஆண்டைகள், அரசர்கள், புரோகிதர்கள், பல்வேறு வகையான

மான்யதாரர்கள் மாறினாலும் தொழிலாளர்கள், கைவினைஞர்கள், பயிரிடுவோர் போன்றோரிடத்து ஒரு மாறுதலும் தோன்றிட வில்லை. அவர்களுடைய ஆண்டைக்கு என்ன நேர்ந்த போதிலும் அவர்கள் நிலத்துடனேயே பிணைக்கப்பட்டிருந்தனர். உழவர்களும் கைவினைஞர்களும், ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எளிதாகச் செல்லக் கடினமாக இருப்பதைக் கண்டனர். பொறுத் திட இயலாத கொடுமையின் தூண்டுதலினாலே (மத்திய, மேற்கு இந்தியாவில் செய்யப்பட்டது போன்று)[18] அல்லது கொடை யளிக்கப்பட்டவரின் நன்மைக்காகக் கொடை விதிமுறையின்படி அகற்றப்பட்டாலே தவிர அதே இடத்திலேயே வாழ்ந்தனர். படைவீரர் போரிடவும், புரோகிதர்கள் புதிய நிலங்களைப் பெற வும், பயணிகள் சமயத்தலங்களுக்குச் செல்லவும் இடைக்கால இந்தியாவில் சென்றதையே குறிப்பிடத் தகுந்த ஒன்று கூட்டும் நிலை எனக் கூறலாம்.

போர்கள் நிறைந்த காலமாக விளங்கிப் படைவீரர்களின் நடமாட்டம் இருந்தபோதிலும் அது கட்டுப்பாடுடைய வாணிபத்தை வளரச் செய்யவில்லை. படைவீரர்கள் தமக்குத் தேவையான உணவுப் பொருட்களின் ஒரு பகுதியினைத் தாமே கொண்டு சென்றனர். மீதியை வற்புறுத்தி வழியில் இருந்த கிராமங்களிலிருந்து பெற்றனர். அது மட்டுமின்றிப் போக்குவரத்து போன்ற பணிகளுக்கும் கிராமங்களிடம் கட்டாயம் செய்து அத்தகைய பணியைப் பெற்றனர். முஸ்லிம் படையினருக்குப் படையுடன் செல்கின்ற வணிகர்களான பஞ்சராக்கள் என்பார், உணவு முதலியன வழங்குவதைப் போன்ற முறையிலான வணிகர் களின் ஒன்று கூடும் முறை வளர்ச்சி பெறவில்லை. இக்காலத்தில் நிலவுகின்ற வழக்கம்போல நன்கொடை பெற்ற புரோகிதர்கள் சில கைவினைஞர்களையும், உழவர்களையும் புதிய வாழுமிடங்களில் வாழ்ந்திடத் தூண்டியிருக்கக்கூடும். ஆனால் குடியேறியவர்கள் தங்கள் ஆண்டைகளோடு சேர்ந்து இருந்தமையால், கட்டுப் பாடுடைய பொருளாதாரம் முன்னர் வாழுமிடங்களில் இருந்த தைப் போலவே புதிய வாழுமிடங்களிலும் காணப்பட்டது. புரோகிதர்கள் நாட்டின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்குக் குடிபெயர்ந்ததைப் பண்டைய கிரேக்கத்தைச் சார்ந்த, நிறைவு பெறாத உயர்குடியினரும், ஆர்வமுள்ள வாணிகர்களும் சென்ற தோடு ஒப்பிட இயலாது. இந்தியாவில் அரசர்கள் தம்மை எதிர்க் கின்ற குடிகளுக்கு எதிராகத் தாம் வலுப்பெற புரோகிதர்களை நிலவகையில் தரிசான நிலப்பரப்பு வெளியில் தங்கிட அழைத் தனர். பொதுவாக பிராமணர்களுக்கு அவர்களுடைய பூர்விக

இல்லத்திலிருந்து 100 கல் தொலைவிற்கு மேற்படாத பகுதியில் நிலம் அளிக்கப்பட்டது.

இடைக்கால தர்மசாத்திரங்களில் காணப்படும் ஒன்று சேர்ந்திருந்த பிராமணர்களின் தோற்றம், குப்தர் காலத்திற்குப் பிற்பட்ட கால கட்டுப்பட்ட பொருளாதார வளர்ச்சியோடு பொருந்துகிறது. பிராமணர்களின் இயங்கும் தன்மையை கலிவர்ஜியங்கள் (கலியுகத்தில் தடை செய்யப்பட்ட பொருட்கள் கட்டுப்படுத்துகின்றன. சமுதாய உயர்நிலை பெற விரும்பியவர்கள் உயர் வகுப்பினருக்குச் சமுதாயத்தில் என்ன விதிக்கப் பட்டிருந்ததோ அதனைப் பின்பற்ற வேண்டியதாயிற்று. பலியிடுதலைச் செய்தற்பொருட்டுப் பிராமணர்கள் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டபோதிலும், தொலை தூரம் பயணம் செய்திட அவர்களுக்கு அனுமதி இல்லை. இதற்குக் காரணம் வேத, சம்பந்தமானதும் இல்லத்தில் செய்யப்படுவதுமான சடங்குகளுக்கு இடையூறு ஏற்படக்கூடும் என்பதே ஆகும். கடற்பயணம் குறித்த விதிமுறைகளோ கடுமையானவையாகும்.[14] ஔசனஸ ஸ்மிருதி, யார் கடற்பயணம் மேற்கொள்கிறார்களோ அவர்கள் சாதியிலிருந்து தள்ளப்பட்டவர்கள் எனவும், இறுதிச் சடங்குகள் அல்லது சிரார்த்தம் செய்ய அருகதை அற்றவர்கள் எனவும் குறிப்பிடுகின்றது.[15] கடற்பயணம் செய்வதற்கான வேள்வியினை ஒரு பிராமணன் செய்த பின்னரும்கூட அவனுடன் நெருங்கித் தொடர்பு கொள்வது விரும்பத்தகாததாகக் கருதப்படுகிறது. பிராமணர்கள் வாழும் பகுதிகள் நிலையானவை; துருக்கியர்கள் அல்லது கர்னாடகர்கள் நிலங்களில் நுழைந்திட இந்து ஒருவனுக்கு பொதுவாக அனுமதியில்லை என்று அல்பெருனி அறிவிக்கிறார்.[16] பிருகத்கதாசாரம் என்னும் சட்ட நூல் தொலைவில் வாழும்[17] ஒருவனுக்கு எந்த மனிதனும் தன் மகளை அளிக்கமாட்டான் என்று குறிப்பிடுவது உயர் வகுப்பார், அதிலும் குறிப்பாகப் பிராமணர்களுக்குப்பொருந்திடக் கூறப்பட்டது ஆகும். தொலை தூரங்களுக்குக் கடல் கடந்து புனிதப் பயணம் செல்வது அல்லது பாரத நாட்டின்[18] எல்லைக்குச் செல்வது தடை செய்யப்பட்டுப் பொருத்தமற்றதென விலக்கப்பட்டது. இவையெல்லாம் நிலமான்ய வட்டார வழக்குச் சூழலில் பொருளுடையதாகின. நாட்டின் ஒரு பகுதிக்கும் மற்றொரு பகுதிக்குமிடையேயான பொருளாதாரம் மற்றும் பிற வகைத் தொடர்புகளைப் பொருத்தமற்றதென்றும் விலக்குகிறது. பண்டை நூல்கள் தேச தர்மம் அல்லது மாவட்டச் சுங்கங்கள் என்ற பொருளில் அதனை குறிப்பிடுவது தனிச் சிறப்பு வாய்ந்ததாகும். ஆனால் பல இடைக்காலப் படைப்புகள் ஹேமசந்திராவின் (1088–1172) அபிதான சிந்தாமணியில்[19]

குறிப்பிடப்பட்டுள்ளது போல க்ராம தர்மம்[20] அல்லது க்ராமிய தர்மத்தைக் குறிப்பிடுகின்றன. சில நூல்கள் க்ராமாசாரம்[21], ஸ்தானுசாரம்[22] என்றும் குறிப்பிடுகின்றன. சுயதேவைப் பூர்த்தியுடைய பொருளாதார, ஆட்சித்துறைப் பிரிவுகளாக வளர்ந்து வரும் கிராமங்களின் முக்கியத்துவத்தினை அவை எதிரொலிக்கின்றன.

## நிலமானிய வரிசைகளும் வருணங்களும்

நிலக்கொடைகளும், துணைமானிய முறையும் சமப் பங்கீடில்லாத நிலம், வலிமை ஆகியவற்றிற்கு வழி வகுத்ததோடு புதிய நிலைபெற்ற நால்வகை வருணமுறைக்கு முற்றிலும் பொருத்தமில்லாத புதிய சமூகக் கூட்டங்களையும் வரிசைகளையும் உருவாக்கின. இடைக்காலச் சட்ட நூல்கள் இத்தகைய வளர்ச்சியைப் பொருட்படுத்தாமல் விட்டுவிட்டன. ஆனால் பிறப்பினால் ஏற்பட்ட வரிசை முறைக்கும், நிலம், அதிகாரம் ஆகியவற்றைக் கொண்டதனால் ஏற்பட்ட வரிசை முறைக்கும் இடையே காணப்பட்ட வேற்றுமையை அகற்றிட கட்டிடக்கலையை அடிப்படையாகக் கொண்ட பல நூல்கள் முயன்றன. வராகமிகிரர் அதற்கான தொடக்கத்தினை உருவாக்கினர். ஆட்சித் தலைவர்களின் மாறுபட்ட வரிசையினருக்கும், நான்கு வருணத்து உறுப்பினர்களுக்கும் வெவ்வேறு வகையான அளவுள்ள வீடுகளைக் குறித்துக் கொடுத்தார். இத்தகைய சூழ்நிலையில் பண்டைய நூல்களின் இயற்கையான நிலை நான்கு வருணத்துப் பிரச்சினைகளை விவாதிப்பதாகவே இருந்திருக்க முடியும். மயமதம் எனப்படும் இடைக்காலத்திற்கு முற்பட்டதான நூல் இவ்வுலகம் முழுவதின் அரசன் 11 மாடி வீட்டிலும், த்விஜாதியினர் 9 மாடி கொண்ட வீட்டிலும், சாதாரண அரசன் (ந்ருபன்) 7 மாடிகொண்ட வீட்டிலும், வைசியர்களும் படைத்துறைத் தலைவர்களும் 4 மாடி கொண்ட வீட்டிலும், சூத்திரர் ஒன்று முதல் மூன்று மாடி வரை உள்ள வீட்டிலும், ஸாமந்த பிரமுகர்கள் போன்றவர்கள் ஐந்து மாடி[23] கொண்ட வீட்டிலும் வசிக்க வேண்டும் என விதிக்கிறுர். ப்ருஹத் ஸம்ஹிதையில் குறிப்பிட்டிருப்பதைவிடத் தெளிவாக நால்வகை வருணத்தவருடன் பல்வேறு வகையினரான அரசர்களும் ஸமாந்தர்களும் இவ்வீட்டுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளனர்.

எனினும் சில நூல்கள் வருணுஸ்ரம ஆராய்வை ஒதுக்கி முழுவதும் நிலமான்யப் பிரபுக்கள் அல்லது உயர் குடியினரின்

தொடர்புடைய நிலையினுலேயே வழி நடத்தப்பட்டுள்ளன. மகா மண்டலேச்வரர், மாண்டலிகர், மகாஸாமந்தர், ஸாமந்தர், லகுஸாமந்தர் உள்ளிட்ட ஒன்பது வகை உயர் குடியினர் வாழு மிடங்களின் அளவினை[24] பட்டாபுவனதேவரின் (பன்னிரண்டாம் நூற்ருண்டு) அபராஜிதப்பிருச்சா என்னும் நூல் வரையறுத்துக் கூறுகின்றது. அளவில் குறைந்த நிலையிலிருந்த சிலரின் இல்லங் களின் அளவினையும் அது குறிக்கிறது. முன் மாதிரியான சிலரின் நிலமானிய அவையினைக் குறிப்பிட்டுப் பேசுகையில் அது எட்டு வகையான நிலமான்யக் கிழாட்களைக் குறித்துப் பேசுகிறது. பேரரசர் அதாவது ஸம்ராட், 'மஹாராஜாதி ராஜ பரமேஸ்வரா' என்ற பட்டத்தினைப் பெற்றவர் நான்கு மண்டலேச்வரர்களையும் பன்னிரண்டு மாண்டலிகர்களையும், பதினறு மகாஸாமந்தர்களையும், முப்பத்திரண்டு ஸாமந்தர்களையும், நூற்று அறுபது லகுஸாமந்தர் களையும், நானூறு ஸதுரஸிகர்களையும் அவர்களுக்குக் கீழ் உள்ள ராஜபுத்ரர்களையும்[25] கொண்டிருக்க வேண்டும் என்று அது சிபாரிசு செய்கிறது. மேலும் அது லகுஸாமந்தர்களின் வரு மானம் 5,000 எனவும், சாமந்தருடையது 10,000 எனவும், மகாஸாமந்தருடையது 20,000 எனவும்,[26] விதிக்கிறது. இந்தப் பல்வேறு வரிசையைச் சேர்ந்த நிலமானியத் தலைவர்கள் க்ஷத்திரி யர்களாக வைத்து எண்ணப்பட்டனரா அல்லது மற்ற வருணங் களுடன் சேர்ந்தவர்களா என்பது தெளிவாக இல்லை. ஆனுல் மற்ருெரு சமகால நூலான மானஸாரம் குறைந்தது ஒரு நில மானிய வரிசையாவது எல்லா வருணத்தவருக்கும் உரியதாக இருக்க வேண்டும் எனக் காட்டுகிறது. அத்தியாயம் நாற்பத்தி யிரண்டில் அது அரசர்களை இறங்கு வரிசையிலும் சமுதாயப் படி நிலையை ஒன்பது வகையிலும் பிரித்துக் காட்டுகிறது. உயர் வானது சக்ரவர்த்தின் என்பதும் இரண்டு கீழான நிலையி லுள்ளவை பிரஹாரஹர், அஸ்திரகிரஹின் ஆகியவையும் ஆகும். சமுதாயப்படி நிலைப்படி அரசன் அல்லது தலைவனின்[27] வேறுபட்ட ஒன்பது இருக்கைகளைக் குறித்தும் விளக்குகிறது. இதில் குறிப் பிடத் தகுந்தது என்னவென்ருல் நிலமாகிய வரிசையில் பிரஹாரஹர், அஸ்திரகிரஹின் ஆகிய இரண்டு அடிப்படையான இராணுவ வரிசைகளை எவ்வருணத்தவராயிருந்தாலும் பெற முடியும் என்பதாகும். வரிசையில் கீழானது எனக் கருதப்படும் அஸ்திரகிரஹின் 500 குதிரைகளையும், 5,000 யானைகளையும், 50,000 படை வீரர்களையும், 5,000 பெண் பணியாளர்களையும், ஓர் அரசியையும்[28] கொண்டிட உரிமை பெற்றிருந்தார். எனவே, இந்நூல் வருண ஆய்வை மீறுகிறது என்பது தெளிவு. இவ்வாருக, புதிய நிலம், அதிகாரம் வழங்குகின்ற சமூக அரசியல் நிறுவனங் கள் தோன்றிட அடிப்படையினை அளிக்கிறது.

இக்காலத்தில் வடகிழக்கு இந்தியாவில் பிரபலமாயிருந்த பௌத்த சமய முறையான வஜ்ராயண முறையில், நால்வகை நிலையின் அடிப்படையில் அமைந்த சமூக வரிசை முறை எதிரொலித்ததனைக் காணலாம். அதனுடைய பல தெய்வக் கோவில் பிரமிட் வடிவத்தில் அடிப்பாகத்தில் 25 போதி சத்துவர் களைக் கொண்டதாக உருவாக்கப்பட்டது. அவற்றின் மேல் ஏழு மனுசிகள் அல்லது மிகப் பெரிய புத்தர்களும் அவற்றின் மேல் ஐந்து தியானி அல்லது தியான புத்தர்களும் உள்ளனர். முடிவில் தெய்வக் கோவிலின் உச்சியில் நன்கு அலங்கரிக்கப்பட்ட நகை யணிந்த வஜ்ரஸத்வர்[29] தலைமைசான்ற சக்தியாக நின்றார். இவை முழுவதும் தெய்வீகமான சமூக ஏணியாக நால்வரிசையிலான புத்த கடவுளை அளித்தன.

வெளி அடையாளங்களாலும், அதிகாரச் சின்னத்தினாலும் உயர் பிரிவினைச் சார்ந்த நில அடிப்படையிலான நற்குடி மக்களின் சமூகத் தனித்தன்மை நிலைநிறுத்தப்பட்டது. தக்காணத்தில் நிலக்கொடைகளுடன் சில சமயங்களில் அவர்களுக்குப் பெருமைச் சின்னம் நெற்றியில் அளிக்கப்பட்டது. நாடு முழுவதும் மானிய தாரர்களுக்குப் பொதுவாக, சாமரம், குடை, குதிரைகள், யானைகள், பல்லக்குகள் போன்றவை அளிக்கப்பட்டன. முடி அரசர்களினால் மட்டுமே அனுபவிக்கப்பட்ட அரிதான ஐந்து இசைக் கருவிகளை[30] இசைக்கும் உரிமையினை அவர்களுள் ஆற்றல் மிக்கவர்கள் பயன்படுத்தும் உரிமையினைப் பெற்றனர். சக்ரவர்த்தின், மகாஸாமந்தர், ஸாமந்தர் போன்றோர் முக்கிய வாயிலை எழுப்பிட (ஸம்ஹத்வாரம்)[31] உரிமை பெற்றனர். அதனைக் குறைந்த மதிப்புப்பெற்ற நிலமானியதாரர்கள் செய்திட இயலாது. சமுதாய அந்தஸ்தினை வருணத்திற்கு மதிப்புக் கொடுத்திடாமலே கொடுத்திருக்க வேண்டும் என்பதனையே இது காட்டுகிறது. இத்தகைய சமுதாய நிலைவரி அடையாளங்களை நிலங்களை வைத்திருப்பதனால் யார் உயர்ந்த இராணுவ, அரசியல் அந்தஸ்துப் பெற்றிருந்தார்களோ அவர்களே இத்தகைய சமுதாய நிலை வரிசைச் சின்னங்களை வைத்திடத் தகுதி பெற்றனர்.

நிலமானியப் பட்டங்கள், இடைக்காலத்தில் கைவினைஞர் களுக்கும், வாணிகர்களுக்கும் இராணுவ, ஆட்சித்துறைப் படி வரிசைகளைக் காட்டும் வகையில் அளிக்கப்பட்டன. கைவினைஞர் களின் தலைவனான வாதேந்திரா என்பதைச் சார்ந்த சூலபாணி என்பான் சமுதாய அந்தஸ்தினைக் கூட்டிய இராணகா[32] என்ற பட்டத்தினைக் கொண்டிருந்தான் என விஜயசேனனின் தியோபரா பட்டயம் அறிவிக்கிறது. க்ஷத்திரியர்கள் அல்லது ராஜபுத்ரர் களுக்கு மட்டுமின்றி நிலங்களை அளிக்கப் பெற்றவர்களும்,

படையில் பணிபுரிந்தவர்களுமான காயஸ்தர்கள் என்பார்களுக்கும், பிற சாதியாருக்கும் தாகூர், இராவுத், நாயகா போன்ற பட்டங்கள் அளிக்கப்பட்டன. பல்வேறு பிரிவுப் பிராமணர்கள் ராஜபுத்ரர்கள், காயஸ்தர்கள், நாவிதர்கள் ஆகிய கீழ்சாதியார் என்று இன்று கருதப்படுவாரிடத்தேயும், இக்காலத்திலும் தாகூர் என்ற பட்டம் நிலவி வருவதை இது இவ்வகையில் விளக்குகிறது.

அரசர்கள், புரோகிதர்கள், அதிகாரிகள் ஆகியவர்களுக்கும் ஆலயங்களுக்கும் தொடர்ந்து நிலத்தையோ அல்லது நிலவருவாயையோ மாற்றிக்கொண்டு வந்த நிலைமையானது இடைக்கால முற்பட்ட காலத்தில் எழுத்தர்கள் அல்லது காயஸ்தர் என்னும் வகுப்பினர் தோன்றி வளர்ந்திட வழி வகுத்தது. நிலம் வழங்கப் பட்ட பத்திரங்களைத் தயாரிக்கவும், நிலங்கள், கிராமங்கள் ஆகியவற்றின் பதிவுகளையும் படிப்படியாகப் பெருகி வரும் பட்டயங்களில் அளிக்கப்பட்ட வருவாய் இனங்களையும் நிருவகிக்கவும் ஏராளமான எழுத்தர்கள், ஆவணக் காப்பாளர்கள் நியமிக்கப்பட வேண்டியதாயிற்று. குப்தர் கால முதலாக ஏற்பட்ட சொத்துப் பங்கீடுச் சட்டத்தினுல் தோன்றிய நிலப்பிரிவினை, தனித்தனியாட்களுக்கு உரிய நிலப்பகுதிகளைக் குறித்து வைக்க வேண்டிய நிலையை உருவாக்கிற்று. சட்டப் புத்தகங்களில் முக்கியமான பகுதியாக எல்லைத் தகராறுகள் விளங்கின. ஆவணங்களின் உதவியின்றி அவற்றைத் தீர்த்து வைப்பது என்பது எளிதாக முடியாது. மேலும் ஒரே நிலப்பகுதியை துணைமானிய முறையினுல் நான்கு அல்லது ஐந்து பேர் உரிமை கொண்டாடக் கூடும். ஒருவர் அந்நிலத்தின் உரிமையாளர் எனவும், வேருெருவர் உரிமையாளரின் பண்ணையாள் எனவும், மூன்ருவது ஆள் துணைப் பண்ணையாள் எனவும், நான்காவது ஆள் உண்மையாகவே பயிரிடுபவர்[33] என்றும் உரிமை கொண்டாடக் கூடும். எனவே, கிராமம் நிலம் ஆகியவை குறித்து அடிக்கடி எழுகின்ற நிலத்தகராறுகளைத் தீர்த்து வைத்திட மிகக் கவனமாகப் பதிவுகளைப் பாதுகாத்திட வேண்டும்.

இப்பணி முழுமையும் செய்து வந்த எழுத்தர் பிரிவினர் காயஸ்த, கரண, கரணிக, அதிக்ருத, புஸ்தபால, சித்ரகுப்த, லேகக, திவிர, தர்மலேகின், அக்ஷரசண, அக்ஷரசஞ்சு, அக்ஷபடாலிக, அக்ஷபடலாதி க்ருத போன்ற பல்வேறு பெயர்களால் அறியப்பட்டனர். பதினுறு வகையினரான பிராமணர்கள் வேத காலத்தில் ஒரே பிரிவுப் புரோகிதர்களாகக் கருதப்பட்டது போலத் தொடக்க காலத்தில் பன்னிரண்டு வகை எழுத்தர்கள், ஆவணக் காப்பாளர்களும்

காயஸ்தர்கள் என ஒரே பிரிவினராக அறியப்பட்டனர். நாளடைவில் மற்ற எல்லா ஆவணக் காப்பாளர்களும் காயஸ்தர்கள் என்றே அழைக்கப்பட்டனர். சமுதாயத்தில் வருவாய்த் துறை, ஆட்சித்துறைக்குரிய தேவைகளை நிறைவேற்றிடத் தொடக்க காலத்தில் உயர் வருணத்தவர்களில் கல்வி அறிவு பெற்றவர்களே காயஸ்தர்களாக அல்லது எழுத்தாளர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். சிவரத்தா என்ற பிராமணர் காயஸ்தராக[34] நியமிக்கப்பட்டதாகக் கல்ஹனு குறிப்பிடுகின்றார். அதைப் போலவே தந்தை வழியில் பிராமண முன்னோர்களைக் கொண்ட லோகனுதா என்பானும் 'கரண'[35] வாக நியமிக்கப் பட்டதாகக் கேள்விப்படுகிறோம். பல்வேறு வருணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட எழுத்தர்கள் தங்கள் பழைய வருணத் தவரோடு நாளடைவில் திருமணம் போன்ற மற்றைய சமூக உறவுகளை அறுத்துக்கொண்டு புதிய சமூகத்துடனேயே ஒன்று கலந்தனர். அவர்கள் வகுப்புக்கு வெளியே மணம் செய்வதற்குத் தடையையும் தன் குடும்பத்திற்குள்ளே மட்டும் மணம் செய்து கொள்வதனையும் ஆதரித்திடப் பழகிக் கொண்டனர். காயஸ்தர்களுக்கு வருண முறையில் எவ்விடத்தை வழங்குவது என்று பிராமணச் சட்டமளித்தவர்கள் குழம்பி அவர்களைச் சூத்திரர்களோடும், துவிஜாக்களுடனும் (இரு பிறப்பாளர்கள்) இணைத்து விட்டனர். தர்ம சாத்திரங்களில் காயஸ்தர்களின் தோற்றம் குறித்து தெளிவாகத் தெரிகிறது. வரலாற்று உண்மை அவர்கள் ஒரு வருணத்தவரல்லர் என்பதை மெய்ப்பிக்கிறது. சமீப காலத்தில் கல்கத்தா உயர்நீதி மன்றம் அவர்களைச் சூத்திரர்கள் என்று அழைக்க அலகாபாத் உயர்நீதி மன்றமோ பிராமணர்கள் என்றழைத்தது.

பிராமணர்கள் எழுத்தர்களாக, பதிவு செய்வோராக முதன்மை பெற்றிருந்த நிலையினைக் காயஸ்தர்கள், அத்தகு தொழில் செய்வோராக எழுந்த நிலை குறைத்தது. மத்தியப் பிரதேசத்தின் சாந்தேல, காலசூரி அரசர்கள், கர்னடகம், ஒரிஸ்ஸா அரசர்கள் ஆகியோரிடத்து காயஸ்தர் அமைச்சர்கள் பணிபுரிந்தனர். அத்தகைய உயர் பதவிகளை வகித்த பிராமணர்கள் இயல்பாகவே இதைக் கண்டு வருத்தம் கொண்டனர். இவர்கள் முக்கியமாகப் பொறுப்பு வகித்து வந்த நிலப் பட்டயங்களையும் அவர்கள் நிருவகித்து வந்தது குறித்துக் கோபம் கொண்டனர். ஏராளமாக கொடையினைப் பெற்றவர்களான பிராமணர்களுக்கு எழுத்தர்களாகவும், ஆவணக்காப்பாளர்களாகவும் விளங்கியவர்களான காயஸ்தர்கள் தொடர்ந்து தொல்லை கொடுத்திருக்கக்கூடும். எனவே பிராமண நூல்களில் காயஸ்தர்

களைச் சிறப்பாகக் குறிப்பிடப்படவில்லை. சட்டமளித்தவரான யாக்ஞவல்க்யரால்[36] கி. பி. 4-ம் நூற்றூண்டில்தான் அவர்கள் முதன் முதலாகக் குறிப்பிடப்பட்டாலும் குடிமக்களை வருத்து வோராகவே எடுத்துக்காட்டப்பட்டுள்ளனர். கி. பி. 12 ஆம் நூற்றுண்டில் காயஸ்தர்களைக் குறைந்துப் பேசுகின்ற போக்கு உச்சநிலையினை அடைந்தது. கல்ஹணரின்[37] ராஜதரங்கிணியில் அவர்களை மிகவும் தீவிரமாகக் கண்டிக்கப்பட்டுள்ளது. பல்வேறு பிற்பட்ட நூல்களிலும் மாறுதல்களுடன் அது தொடரப் பட்டுள்ளது.

நிலக்கொடை, அது சம்பந்தமான நடவடிக்கைகளை வட இந்தியாவின் நாட்டுப்புறங்களில் தோன்றிய கிராமத்தின் மூத்தவர்கள் அல்லது தலைமை மனிதர்களாக விளங்கிய மஹத் தரர்கள் என்பாரிடத்து அறிவிக்க வேண்டியிருந்தது. அவர் களுக்குக் கிராமத்தின் நிலத்தில் குறிப்பிடத்தகுந்த அளவு பங்கு இருந்தமையால் அவற்றின் நிருவாகத்திற்குப் பொறுப்பாக விளங்கினர் என்பது தெரிகிறது. கி. பி. 920 இல் ஆக்கப்பட்ட ஹரிசேனுசாரியரின் ப்ருஹத்கத கோசாவின் ஆதாரத்தினை நாம் ஏற்பதாயின் 1,000 சாடிகள் நெய் அரசனுக்குக் கொடுப் பதாக ஒப்புக்கொண்டு தான் ஒரு கிராமத்தின் மகர்தரா மேய்ச்சல் நிலத்தினை உடைமையாக்கிக் கொண்டார் எனத் தோன்றும்.[38] குப்தர் காலம் முதல் கிராமக் குடியேற்றங்களில் காணப்படும் இந்த உண்மையான முக்கியத்துவம் வாய்ந்த வகுப்பார் வருணம், சாதி ஆகியவற்றின் எல்லைகளைக் கடந்தவர்கள். இவ்வகுப்பினர் ஒவ்வொரு கிராமத்திலும் நிலம் வைத்திருந்தபோதும் எப்போதும் அதேசடங்கு பூர்வமான அந்தஸ்தினைப் பெற்றிருக்கவில்லை. நவீன காலத்தில் உயர் வகுப்பாரிடத்தும், தாழ்ந்த வகுப்பாரிடத்தும் இக்காலத்திலும் மஹ்தோ, மெஹ்தா, மெஹதா, மல்ஹோல்த்ரா, மெஹ்ரோத்ரா, மெஹதார் ஆகிய பட்டங்கள் தொடர்ந்து நிலவி இக்குடும்பங்களின் எதிர்கால நிலைக்கு மாறுதல்களுக்கு வழி வகுக்கின்றன. இக்குடும்பங்கள் சிலவற்றிலேனும் இடைக்கால முன்னேர்கள் குறைந்த பட்ஷம் கிராமத்தில் தலைமைப் பதவியினை யாகிலும் அனுபவித்து முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக விளங்கி யிருக்கக்கூடும். மேற்கு இந்தியாவில் உள்ள கிராமத் தலைவர் களான பத்தாகிலாக்கள் என்பார்க்கும் இதனையே கூறலாம். அவர்கள் ஒரே சாதியைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்பது 11, 12 ஆம் நூற்றுண்டின் பட்டயங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்களுடைய இக்காலப் பின்தோன்றல்களான பாடீல்கள் அல்லது படேல்கள் ஒரே சாதியைச் சேர்ந்தவர்கள் அல்லர். இதைப் போலவே இடைக்கால தக்காணத்தில் வாழ்ந்த

வருவாய்த்துறை, ஆட்சித்துறை உரிமைகள் வழங்கப்பெற்ற காவும்தர்கள் எனப்படும் கிராமத்தில் மூத்தவர்களும், தலைவர்களும் ஒரே சாதியைச் சார்ந்தவர்கள் அல்லர். இக்காலத்திய அவர்களுடைய பிரதிநிதிகளான மைசூரின் கௌடர்கள் சூத்திரர்களாகக் கருதப்படுகின்றனர்.

## வைசியர்களின் வீழ்ச்சியும் சூத்திரர்களின் ஏற்றமும்

பல்வேறு நிலையைச் சார்ந்த ஆட்சித்துறையில் சம்பந்தப்பட்ட நிலத்தினைக் கொண்ட நற்குடி மக்களின் எழுச்சியினாலும், வைசியர்கள் சூத்திரர்களுக்கிடையேயான உறவு முறையின் மாறுதல் நிலையினாலும் வருணமுறை மாறுதல் அடைந்தது. குப்தர்களுக்கு பிற்பட்ட காலத்தில் சூத்திரர்கள் அடிமைகளாக, கைவினைஞர்களாக, வேளாண்மைத்துறைத் தொழிலாளர்களாக மட்டும் விளங்கிடவில்லை. அவர்கள் வைசியர்களுடைய இடத்தை உழவர்களாகவும் பற்றிக் கொண்டனர். யுவாங் சுவாங் சூத்திரர்களை உழவர்கள் என்றே தெளிவாகக் குறிப்பிடுகின்றார்.[39] வைசியர்களுக்கும் சூத்திரர்களுக்குமிடையே எவ்விதக் குறிப்பிடத் தகுந்த வேறுபாடுகள் இல்லாமையையும், ஒரே நகரத்தில் ஒரே கிராமத்தில் சேர்ந்து வாழ்ந்ததையும் ஒரே வீட்டில் ஒன்று கலந்ததையும் அல்பெருனி குறிப்பிடுகின்றார்.[40] இந்த மாறுதல் சில இடைக்கால நூல்களில் பிரதிபலிப்பதுமல்லாமல் அவற்றில் சூத்திரர்கள் உழவர்களாகவும், பண்ணையாட்களாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஸ்கந்தபுராணம் சூத்திரர்களுக்குத் தானியமளிப்பவர்களாகவும் (அன்னத) வீட்டினை உடையராகவும் (கிரஹஸ்தர்)[41] எடுத்துக்காட்டுகிறது. ஹேமசந்திரரின் அபிதானசிந்தாமணி உழவர்களையும், பண்ணையாட்களையும் குடும்பின்கள்[42] என்று வர்ணிக்கிறது. நம்முடைய இக்காலத்தில் உத்திரப்பிரதேசத்திலும், பீஹாரிலும் சூத்திர சாதியினர் குர்மிக்கள் எனப்படுகின்றனர். மகாராஷ்டிரத்தின் குன்டாக்கள் இடைக்கால குடும்பின்களின் வழித்தோன்றல்கள் என்பது தெளிவு.

கிறித்துவ ஊழியின் தொடக்க காலத்திலிருந்து ஸ்மிருதிகள் வைசியர்களைச் சூத்திரர்களின் நிலையினை ஒத்தவர்களாகச் செய்துள்ளன. வேளாண்மை வகுப்பார் என்ற தனித்தன்மையினை கி. பி. ஆறும் நூற்றுண்டிலிருந்து வைசியர்கள் பெரிதும் இழந்து விட்டனர். கலியுகத்தில் வாணிகர்கள் வீழ்ச்சி அடைவர் எனவும், சிலர் எண்ணெய் எடுப்போராகவும், சிலர் தானியங்

களைப் பதர் நீக்குவோராகவும் (தண்டுலகாரின்) சிலர் ராஜபுத்ரர் களிடத்தும் மற்றையோர் எல்லாவகை வருணத்தவரிடத்தும்[48] அடைக்கலமாவர் என்று பின்னால் நிகழவிருக்கும் செய்தியினை ஸ்கந்தபுராணம் முன்னதாக உரைக்கிறது. சம்பிரதாயப்படியும் சட்டப்படியும் கி. பி. 11 ஆம் நூற்றாண்டில் அவர்கள் சூத்திரர் களாகவே கருதப்பட்டனர். ஏனென்றால் அல்பெருனி வைசியர் களும், சூத்திரர்களும் வேத நூல்களை ஒப்புவித்தால் தங்கள் நாவினை இழந்தனர் என்ற தண்டனையைக் குறிப்பிடுகிறார்.[44] கி. பி. 5 ஆம் நூற்றாண்டுவரை வாணிகர்களாக வைசியர்கள் வளமான வாழ்க்கையினை வாழ்ந்ததையும் அவர்தம் அறக் கொடையையும் சிறப்புறப் பாஹியான் மொழிகிறார். ஆனால் குப்தர் காலத்திற்குப் பிற்பட்ட காலத்தில் வாணிகத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாக அவர்களுடைய நிலையில் துயர் ஏற்பட்டது. கி. பி. 8 ஆம் நூற்றாண்டிலிருந்து வாணிபமும் வர்த்தகமும் வீழ்ச்சியுற்றன. வாணிகர்கள் தங்கள் சிறப்பினை இழந்துவிட்டார்கள் என்பதை எடுத்துக்காட்ட நல்லதொரு ஆதாரம் உள்ளது. இச்சந்தர்ப்பத்தில் பேராசிரியர் நிஹாரஞ்சன் ரே என்பார் குறிப்பிடத்தகுந்த பகுதி ஒன்றுக்கு நம் கவனத்தை ஈர்க்கிறார். இலட்சுமண சேனனின் காலத்தில் ஸக்ரத்வஜர் என்ற வணிகர்களின் கொடியேற்று விழாவின்போது ஓர் எழுத் தாளர், ''உங்களை ஒருகாலத்தில் உயரே ஏற்றிய வணிகர்களே எங்கே? நீங்கள் ஏராகவும், விலங்குகள் கட்டப்படும் தூணாகவும் இப்போது பயன்படுகிறீர்கள்'' என்று குறிப்பிடுகின்றார்.[45] வாணிகத்தின் வீழ்ச்சி யார் அதனை மேற்கொண்டிருந்தார்களோ அவர்களின் நிலையைத் தாழ்வுறச் செய்தது.

இந்த சமயம் இடைக்காலத்தில் நாட்டின் தொலைதூரங் களுக்குப் பரவியது என்றால், கங்கைச் சமவெளியின் மையப் பகுதியில் தோன்றி வளர்ந்த நால்வருண முறையானது பரவிற்று என்று பொருள் கொள்ள முடியாது. பண்டைக்காலத்திலிருந்து வட இந்தியாவில் இருந்த பல சாதிகள் க்ஷத்ரியர்கள், வைசியர் களின் பிரிவில் இணைக்கப்பட்டுள்ளன. ஆனால் தென்னிந்தியா விலும், வங்காளத்திலும் இடைப்பட்ட சாதிகள் நீங்கலாகப் பிராமணர்களையும், சூத்திரர்களையும் மட்டுமே முக்கியமாகக் காண்கிறோம். இந்த வினோதமான முறையின் பின்னணியினை இடைக் காலத்தின் முன்னிருந்த காலத்தில் காணலாம். குப்தர் காலத்திலும், அதற்குப் பிற்பட்ட காலத்திலும் வைசியர்களுக்கும் சூத்திரர்களுக்குமிடையே இருந்த வேறுபாடுகள் மறையத் தொடங்கியதும் வங்காளத்திலும் தென்னிந்தியாவிலும் பிராம வரயம் வளர்ச்சி பெற்றது. மேலும் இராஜபுத்ரர்களின் வருகை

உண்மையான க்ஷத்திரிய வருணத்தைப் பின்னுக்குத் தள்ளியது. வேதகால ஆரியர்கள் மொத்தமாக வந்தமையாலே பிராமணீயம் வளர்ச்சி பெறவில்லை. ஏனென்றால் அவர்களில் பெரும்பாலோர் விஸ்களாக அல்லது வைசியர்களாக விளங்கினர். எனவே பூர்வீகக் குடியினரான இந்துக்கள் அல்லாதோர், சுற்றுப்புறப் பிரதேசங்களில் இருந்தோர் பிராமணீய முறையில் சூத்திரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இப் பகுதிகளில் வாழ்ந்த தொல்குடிச் சார்ந்த மக்கள் க்ஷத்ரியர்களாலோ இராசபுத்திர அரசர்களாலோ வெல்லப்பட்டிருக்கக்கூடும். ஆனால் கல்வியறிவு பெற்றவர்களாகவும், இப்பகுதிகளில் வளமிக்க நில உரிமையாளர்களாகவும் விளங்கிய பிராமணர்களே உண்மையில் அவர்கள் மறைந்திட்ட நிலையைச் செய்தவர்கள் ஆவர். வங்காளத்தின் பூர்வீகக் குடியினர் சூத்திரர்களே என மனித உடல் சார்ந்த அளவைக் கல்விகள் அறிவுறுத்துகின்றன. ஆனால் பிராமணர்களை அவ்வாறு குறிப்பிடவில்லை. மஹலனோபிஸின் கருத்துப்படி வங்கத்தில் உள்ள பல்வேறு சூத்ர சாதியினர் ஒரே இன மூலத்தைக் கொண்டவர்கள் மட்டுமின்றி அவர்களுக்கு அண்டையிலுள்ள பீஹாரிகளை ஒத்துள்ளனர். ஆனால் வங்காளத்திலுள்ள பிராமணர்களோ வட இந்தியாவில் இருந்த மற்றைய பிராமணர்களை ஒத்துள்ளனர்.[46]

இக் காலத்தில் அயல்நாட்டவரின் வருகை குடியேறிய இனத்தவர்கள் ஆகியவை க்ஷத்ரியப் பிரிவில் புதிய சாதிகளை உருவாக்கின. ஆனால் வங்காளமும், தென்னிந்தியாவும், ஒருபோதும் அயல் நாட்டுப் படையெடுப்புகளால் பாதிக்கப்படவில்லை. இந்தப் பகுதிகளில் தல இனத்தவரின் ஆளுகின்ற தலைவர்கள் மட்டுமே க்ஷத்ரியர்கள் பிரிவில் சேர்க்கப்பட்டு, பெரும்பான்மையான அவர்களின் இன மக்கள் சூத்திரர்கள் நிலைக்கு தாழ்த்தப்பட்டனர். இடைநிலைப்பட சாதிகள் இல்லாமையால் நாட்டின் மற்ற எந்தப் பகுதியிலும் இல்லாத அளவிற்கு வங்காளத்திலும் தென்னிந்தியாவிலும் அதிக அளவு சமூகத்தின் போக்கின் திசை ஒருமுகப்படுத்தப்பட்டது. ஒருவேளை பிற்பட்ட காலங்களில் இங்கு ஏற்பட்ட தீவிர இயக்கங்கள் இதற்குக் காரணமாக விளங்கியிருக்கக்கூடும்.

## சாதிகளின் பெருக்கம்

இடைக்காலத்தின் முற்பகுதிக் காலம் பெருக்கமும், துண்டுபடுதலும் நேரிட்ட காலமாகும். இருந்த வருணங்கள் பல சாதிகளாகத் துண்டுபட்டு அவற்றுடன் பல இனங்களும் சாதிகளும் ஒன்று சேர்ந்து அவைகளுக்குள் இணைக்கப்பட்டன. பத்தாம் நூற்றுண்டைச் சேர்ந்த வங்கத்தின் செப்புப் பட்டயத்தில் 36

வருணங்களைக் கொண்டு பிருஹத்சத்திவண்ணு[47] எனப்படும் கிராமத்தின் பெயர் காணப்படுகிறது. இன்றும் அத்தகைய பெயர்களைக் கொண்ட பீகாரில் காணப்படும் கிராமங்கள் இடைக்காலங்களில் தோன்றியவையாக இருக்கக்கூடும்.

பிராமணர்களிடையேதான் பெருக்க முறை குறிப்பிடத் தகுந்ததாகத் தோன்றுகிறது. பல பிராமண சாதிகள் என்ன சடங்குகளைக் கடைப்பிடித்தார்களோ அவற்றினடிப்படையிலோ, அல்லது எந்த வேதப்பகுதியின் கல்வியை வளர்த்தார்களோ அவற்றினடிப்படையிலோ பெயரிட்டு அழைக்கப்பட்டன. ஆனால் அவர்களுடைய சாதிப் பெருக்கத்தின் முக்கியக் கூறுபாடு இனப் பண்பின் வலுவான வளர்ச்சியே ஆகும். நிலப்பட்டாக்களில் பிராமணர்கள் அவர்களுடைய கோத்ரம், நான்கு தலைமுறையைச் சேர்ந்த ஆண் முன்னோர்கள், வேதக் கல்வியின் கிளைப்பிரிவு, இறுதியாக எங்கிருந்து வந்தார்களோ அந்த பூர்வீக இல்லம், கிராமம் ஆகியவற்றின் வாயிலாகவே அறியப்படுகிறார்கள். நாளடைவில் அவர்களுடைய கோத்ரம், மூலம், குடும்பம், நிலச் சார்பு ஆகியவற்றினால் அறிந்து கொள்ளப்பட்டனர். இப்போது அவர்களுடைய கோத்ரத்தின் தொடர்ச்சி, தூய்மை, ஆகியவை குறித்து உறுதியாகக் கூறுவது கடினம். ஏனென்றால், குறிப்பாக தக்காணத்திலும், தென்னிந்தியாவிலும் ஆரியரல்லாத இனத்தவர்களுக்கும் ஆரிய கோத்ரப் பெயர்கள் கொடுக்கப்பட்டு பிராமணர்கள் ஆக்கப்பட்டனர். ஆனால் ஒருவருடைய செயல் எல்லையினைக் கொண்டுதான் எந்நிலத்தைச் சார்ந்தவர் என்பதைக் கண்டறிய இயலும். பெரும்பாலான நிலப்பட்டயங்களில் பிராமணர்களின் பூர்வீக இல்லங்கள் பெருமையுடன் குறிப்பிடப்பட்டுள்ளன. குப்தர்கள் காலம் முதல் ஒரு பிராமணன் எந்தக் கிராமமோ அல்லது கிராமங்களோ அவற்றைச் சார்ந்தவன் என அறியப் படுகிறான். குப்தர்களுக்குப் பிற்பட்ட காலத்தில் ஏராளமான கிராமங்கள் புகழ்ந்துரைக்கப்படுவதன் காரணம் அவை பிராமணர்களின் சொந்த நிலங்களாகும். சித்தாலா என்ற கிராமம் 11 ஆம் நூற்றாண்டுப் பட்டயத்தில் கிராமங்களில் சிறந்ததும் என்றும், அக்கிராமம் ஆரிய வர்க்கத்தின் அணிகலன் என்றும் அதிர்ஷ்ட தேவதை இராதா என்னுமிடத்திற்குத் தலைமை வகிக்கிறாள் என்றும் கூறப்பட்டுள்ள குறிப்புகள் மேற் கூறியதற்குப் பொருத்தமான விளக்கங்களாகும்.[48]

இடைக்காலத்தின் முற்பகுதிக் காலத்தில் இராதாவின் பிராமணர்கள் அவர்களுடைய பூர்வீகமான கிராமங்களினடிப் படையில் (காமிகள்)[49] 56 துணை சாதியாராகப் பிரிக்கப்பட்டனர். அவற்றில் பெரும்பாலானவை பதினொன்று-பதிமூன்றும் நூற்றாண்

டுப் பட்டயங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. பதினைன்காம் நூற்றாண்டில் மைதில் பிராமணர்களின் உறவு நிலையினைத் தீர்மானித்தார். அவர்கள் 180 பூர்வீக இனங்களாகப் (மூலங்கள்) பிரிக்கப்பட்டனர். அவர்களுடைய பூர்வீக இல்லங்களின் எண்ணிக்கை அதன் விளைவாக ஆயிரமாக உயர்ந்தது. மைதில் என்ற கிராமத்தின் மக்கட்தொகை 15,00,000 எனக் கணக்கிடப்பட்டது (ஆனல் துரதிர்ஷ்டவசமாக சாதிக் கணிதை விடப்பட்டுவிட்டது). தோராயமாக 1,500 மைதிலிகளுக்கு ஒரு துணைச் சாதி என்று பொருள் கொள்ளலாம். சில நேரங்களில் பிராமணர்கள் மூன்று கிராமங்களிடம் கொண்ட தொடர்பின் விளைவாகவே அறிந்து கொள்ளப்பட்டனர் எனப் பதினேராம் நூற்றாண்டின் பாலர் பட்டயம் காட்டுகிறது. இப்பழக்கம் பின்னர் பெரிதும் பரவியது. ஒவ்வொரு மைதில் துணைசாதியும் ஒன்று இரண்டு அல்லது மூன்று கிராமங்களைத் தங்களுடையப் பூர்வீக இல்லம் என்ற அடிப்படையினைக் கொண்டு பெருமைப்பட்டுக் கொண்டதற்குக் காரணம் மைதில் சாதியினர், வரிசையில் தாழ்ந்தது என்று துணை சாதியோடு சமூக உறவு கொள்ள மறுத்தமையாலேயே. அதைப் போலவே காயஸ்தர்களும் நிலத்துணைச் சாதியார்களாகப் பிரிக்கப்பட்டனர். மைதில்கள் போன்ற எண்ணிறந்த மூலங்களைத் தற்போது பீகாரின் கரண காயஸ்தர்கள் காத்து வருகின்றனர். அம்பஷ்ட காயஸ்தர்கள் 100 துணைச்சாதிகளுக்கும் மேலாக பல்வேறு கிராமங்களிலும் உள்ள அவர்களின் இல்லங்களின் அடிப்படையிலேயே பிரிக்கப்பட்டுள்ளனர். இவையெல்லாம் திருமணங்களைத் தீர்மானித்திடக் கணக்கிலெடுத்துக் கொள்ளப்பட்டன. பிராமணர்கள், காயஸ்தர்கள், பிற படித்த இந்துக்கள் போன்ற தங்களுடைய வம்சாவளியினை அழியாமற் காத்து வருபவர்களிடையே கிராமதர்மக் கோட்பாடு மிகவும் அறிமுகமான ஒன்று என்பது வெளிப்படை. தாழ்ந்த குலத்தவரான கோலாக்கள், குர்மிக்கள் எண்ணிக்கையில் அதிகமானவர்கள் ஆவர். அவர்கள் பல துணைச் சாதிகளைக் கொண்ட நிலப்பிரிவுகளாகப் பிரிந்துள்ளனர். ஆனல் எழுத்து ஆவணங்கள் இல்லாமையினல் குடும்பம், கிராமம் போன்ற உணர்வுகள் அவர்களிடையே தோன்றிடவில்லை. இடைக்கால பிராமணர்களிடையே[50] ப்ரஹ்மவைவர்த்த புராண மூதுரையான, நாட்டிலுள்ள வேற்றுமைகள் சாதி வேற்றுமைக்கு வழிவகுக்கும் என்பது வலிவுடன் வேலை செய்தது. இது மற்ற வருணத்தவருடைய சாதிகள் பல தோன்றியதையும் விளக்குகிறது.

க்ஷத்திரிய இனம் ராஜபுத்ரர்கள் என்ற புதிய மக்களின் தோற்றத்தாலேயே பெருகியது. ராஜபுத்ரர்கள் கொண்ட இன, குடும்பப் பெருமைகளோடு வேறு எந்த இனமும் வளர்ச்சி பெற

வில்லை. அவர்களில் சிலர் உண்மையான க்ஷத்திரிய இன வழி வந்தவர்களாயிருக்கக் கூடும். ஏழாம் நூற்றாண்டிலிருந்துதான் பட்டயங்களில் குறிப்பிடப்படும் சந்திர குலத் தோன்றல்கள், சூரியகுலத் தோன்றல்கள் என்று கூறிக் கொள்ளும் பழக்கம் தொடங்கிய சாளுக்கியர்கள், சாந்தேலர்கள், பாலர்கள் தன இனத்தவர்களாக இருந்திருக்கக் கூடுமாதலால் க்ஷத்திரிய மரபினைப் பிராமண குடிவழிப் பட்டியல்களை ஆராய்பவர் அவர்களுக்கு அளித்தனர் போலும். இடைக்காலத்தின் முற்பட்ட காலத்தில் க்ஷத்ரிய ராஜா உலியதே விதி நாடு முழுவதும் செயல்பட்டது. புதிய க்ஷத்ரியர்களான பிராட்யா எனப்பட்டோருக்குச் சடங்குகள் செய்ய உரிமையில்லாதோர் எனப்படும் ஸம்ஸ்கார வர்ஜித என்னும் பட்டம் வழங்கப்பட்டது. ஏனென்றால் பிராமண சமுதாய நிலையில், மட்டமான சடங்குகள் மூலம் அவர்கள் வந்ததைக் குறிப்பிடும் தீய சொல்லை மறைத்தலைக் கூறும் மங்கல வழக்கு இதனைக் கூறலாம். இரண்டாம் தரமான க்ஷத்ரியர்களாக பாக்டீரிய கிரேக்கர்கள், சாகர்கள், பார்த்தியர்கள் போன்றவர்கள் கருதப்பட்டு இந்துச் சமூகத்தில் கலந்தமைக்குக் காரணம் அவர்களிடையே வலுவான அவர்களுடையது என்ற சமயப் பண்பாடு இல்லாமையே. க்ஷத்ரியர்களுடைய வரிசையில் ராஜபுத்ரர்களாக மத்திய ஆசிய மக்களான ஷூணர்கள், கூர்ஜாரர்கள், ஐந்து-ஆறும் நூற்றாண்டுகளில் இணைந்தமையே உண்மையில் க்ஷத்ரிய சாதிகள் பெருகினமைக்குக் காரணமாகும். சோலங்கிகள், (சாளுக்கியர்கள்) பாரமாரர்கள், சாஹமானர்கள், தோமாராக்கள், காஹதவாலர்கள் போன்றவர்கள் மத்திய ஆசியாவைப் பூர்விகமாகக் கொண்டிருந்திருக்கக் கூடும். 'ஜாட்கள்' எனப்படுவார் ராஜபுத்ரர்கள் எனக் கருதப்படாவிடினும் மத்திய ஆசிய மக்களின் இனத் தொடர்டகளைக் கொண்டவர்கள் ஆவர். அவர்களுடைய தற்போதைய காப்கள் எனப்படும் அவர்களுடைய சாதி இணைப்புகள், கூர்ஜாரர்கள், தோமாரர்கள், மற்றைய ராஜபுத்ர இனத்தவர்களிடமிருந்து[51] சேர்க்கப்பட்ட உழவர்கள், படை வீரர்களைக்கொண்ட ஒன்றுபட்ட சாதியாகும். தோமார் ஜாட்கள், குஜார் ஜாட்கள் குறித்துக் கேள்விப்படுகிறோம். பதிமூன்றாம் நூற்றாண்டின் சான்று ஒன்று தோமார், குஜார் பிரதிநிதிகள் ஜாட்களின் அவையில் அமர்ந்திருந்தனர் என்று காட்டுகின்றது.[52] ஜாட்கள், அஹீர்கள், குஜர்கள் ஒன்றாகப் புகைபிடித்தல், குடித்தல் ஆகியவற்றைச் செய்வதைக் காண்கிறோம். எல்லா அயல்நாட்டவர்களும் க்ஷத்ரியர்களாகவும், இராஜபுத்ரர்களாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டனர் என்று எண்ணுவது தவறு. ஏனென்றால் குஜர்கள் நாளடைவில் பிராமணர்கள், பணியாட்கள், குயவர்கள், பொற்கொல்லர்கள் எனப் பிரிந்தனர். இடையர்

4744
N79

கள், உழவர்கள் (குன்பிகள்) பற்றிக் கூறமுடியாது. ஏனென்றால் அவர்கள் சூத்திரர்கள்[53] எனக் கருதப்பட்டனர்.

இடைக்கால முன்பகுதிக் காலத்தில் சூத்திரர்கள் பெரும் எண்ணிக்கையுடைய சாதிகளாயினர். முந்தைய சட்ட நூல்களில் 10 முதல் 15 கலப்பு சாதிகளைக் குறிப்பிடுகையில், கி. பி. முதல் நூற்றாண்டுப் படைப்பான மனுவின் சட்ட நூல் 61 கலப்பு சாதிகளைக்[54] குறிப்பிட்டுக் காட்டுகிறது. அத்துடன் ப்ரஹ்மவைவர்த புராணத்தில்[55] குறிப்பிடப்பட்டுள்ள கூடுதலான சாதிகளின் பட்டியலைச் சேர்த்தால் இந்த எண்கள் 100ஐத் தாண்டுகிறது. யாதவ ப்ரகாசரின் வைஜயந்தியிலிருந்தும், ஹேமசந்திரரின் அபிதான சிந்தாமணியிலிருந்தும் சூத்திர சாதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதை யூகிக்கலாம். கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த விஷ்ணு—தர்மோத்தரபுராணம் என்னும் படைப்பு, வைசியப் பெண்டிருக்கும், தாழ்ந்த சாதி ஆடவருக்கும் இடையே ஏற்பட்ட உறவின் விளைவாக கலப்பு இனங்கள் உருவாயின என்று குறிப்பிட்டாலும், அவற்றைக் குறித்து விளக்கிடவில்லை.[56]

காடுகள், வனங்கள் போன்றவற்றில் வாழ்ந்த பின்தங்கிய மக்களை வேளாண்மையடிப்படையில் ஏற்றம் பெற்றிருந்த பிராமணர்களாக்கப்பட்ட அரசர்கள் வெற்றி கொண்டனர். இதன் விளைவாக எண்ணிக்கையிலும், வகையிலும் பல சூத்திர சாதிகள் பெருமளவில் கூடின. மத்திய இந்தியாவிலிருந்து கிடைத்த இடைக்காலப் பட்டயம் ஒன்றில் சபரர்கள், பில்லர்கள், புலிந்தர்கள் போன்றோர் அழிக்கப்பட்டதாகக் குறிப்பிடுகிறது.[57] ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து 500 ஆண்டுகள் எல்லா தக்காணச் சக்திகளும் ஆபீரர்களுக்கு[58] எதிராகப் போரிட்டன. அவர்களை பிரமாணப் பிரிவில் சேர்த்திட இயலவில்லை. கக்குக பிரதிஹாரர் ஜோத்பூருக்கு அருகில் ஆபீரர்களைத் தோற்கடித்து, அங்கு பிராமணர்களையும் வைசியர்களையும் பாதுகாப்பும், வாழ்க்கை வசதியும் அளிப்பதாக உறுதிகூறிக் குடியமர்த்தியதாக கி.பி. 861ஐச் சார்ந்த பட்டயம் காட்டுகிறது.[59] ரத்தன்பூர் அரசன் இரண்டாம் ஜாஜ்ஜாலதேவன் என்பான் தைருக்கள் அல்லது தாரஸ் எனப்பட்ட இனமரபுக்குழுவின் பிடியிலிருந்து விடுவிக்கப் பட்டதையும், அதனை அவன் இரண்டு பிராமணர்களுக்கு ஒரு கிராமத்தினை அளித்துக் கொண்டாடியதையும்[60] பன்னிரண்டாம் நூற்றாண்டின் கால சூரிப்பட்டயம் பேசுகிறது. அக்கிராமம் தைருக்களின் பகுதியில் இருந்ததா என்பது தெளிவாகத் தெரிய வில்லை. ஆனால் வெற்றி பெறப்பட்ட பகுதிகளில் புரோகிதர்கள் நிலம் அளிக்கப் பெற்றனர். அவர்கள் அங்கு வாழ்ந்த இனமரபுக் குழுவினரையும், பூர்வ குடியினரையும் தம் பண்பாட்டுச் சூழலில்

 113701

இணைத்தனர். இந்தச் செயல் அமைதியான முறையில் நடைபெற்றிருக்கலாம். ஆனால் அமைதியானதோ, அல்லது வேறு வகையானதோ அது வெற்றி பெற்றது. இதற்குக் காரணம் உயர்வான பிராமணர்களின் தனிப் பொருட்கூறு வாய்ந்த பண்பாடேயாகும். அது புதிய எழுத்து முறைகளையும், மொழியையும், சடங்குகளையும், கல்வியறிவில்லா மக்களுக்கு அளித்ததோடு ஏர் உழவு, புதிய பயிர்கள், பருவங்கள், நாட்குறிப்பு, கால்நடைச் செல்வப் பாதுகாப்பு போன்றவற்றையும் பழக்கப்படுத்தியது. பிராமண சமுதாயப் படிநிலையில் இனமரபுக் குழுவினர் எப்போதும் அதே இடத்தை அளிக்கப்பெற்றிருக்கவில்லை. அதே பழங்குடியினர் கூட பல்வேறு வருணங்களாகச் சாதிகளாகப் பிரிந்தனர். ஆபீரர்கள் இந்துச் சமுதாயத்தில் சூத்திரர்களாகச் சேர்க்கப்பட்டபோதிலும், ஆபீர பிராமணர்கள், ஆபீர க்ஷத்ரியர்கள், ஆபீர வைசியர்கள், ஆபீர மகாசூத்திரர்கள், ஆபீர தச்சர்கள் பொற்கொல்லர்கள்[61] பற்றிக் கேள்விப்படுகிறோம். எனினும் எல்லா வகைகளும் ஜாதி தர்மம் கண்டிப்புடன் பின்பற்றப்பட்டது. ஒவ்வொரு முக்கியமான சாதியும் அதனுடைய பழக்கங்களையும், நடைமுறைகளையும் நிலை நிறுத்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டது. ஆபீரர்கள், ஆகாரீர்கள், அம்பஷடர்கள், பில்லர்கள், சண்டாளர்கள், கௌன்காச்கள் ஆகியோர் பிரஹ்ம வைவர்த்த புராணத்திலும்[62] மற்ற நூல்களிலும், கலப்பு சாதியார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர். ஆனால் உண்மையில் அவர்கள் பிராமணிய சமூக அமைப்பில் தூய்மையான அல்லது தூய்மையற்ற சூத்திரர்களாக ஏற்றுக் கொள்ளப் பட்டவர்கள் ஆவர்.

தூய்மையற்ற சூத்திரர்கள் அல்லது தீண்டத்தகாதவர்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை இடைக்காலம் கண்டது. அவர்கள் பாணினியால் கி. மு. நான்காம் நூற்றாண்டில் முதலில் குறிப்பிடப்பட்டனர். இடைக்காலச் சட்ட நூல்கள் தீண்டத்தகாதவர்களைப் பசுவினை உண்பவர் என்று விவரித்து, அந்த்யஜர்கள், பராத்தாக்கள், பாரூடாக்கள், பேடா, பில்லர், சண்டாளர், சர்மாகாரர், தாசர், நாடா,[63] ரஜகார் என்றெல்லாம் பட்டியல் போட்டுக் காட்டுகிறது. இவைகளில் சில கிறித்துவ ஊழியின் தொடக்கத்தில் தோன்றுகின்றன. பேடாக்கள், தண்டுவாயாக்கள் ஆகியோர் அல்பெருனியால் குறிப்பிடப்பட்டுள்ளனர். பதாடு, சண்டாளர், டோம, ஹாதி,[64] போன்றோரையும் அவர் குறிப்பிடுகின்றார். இடைக்காலத்து முற்பகுதிக்கால நூல்களில், பன்னிரண்டு வகைப்பட்ட தீண்டத்தகாதவர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர். ஆனால் உண்மையான எண்ணிக்கை அதற்கு மேலும் இருக்கக்கூடும். 'பராசரா' ஸ்ம்ருதி என்ற சட்ட நூலின் விளக்கமான விதிகள் சண்டாளர்கள்,

ஸ்வாகாக்களின் எண்ணிக்கை அதிகரிப்புக் குறித்து அறிவிக்கிறது.

தீண்டத்தகாதவர்களின் எண்ணிக்கை அதிகரிப்புக் குறித்து விளக்குவது கடினம். பெரும்பாலான தீண்டத்தகாத சாதியினர் பின்தங்கிய இனமரபுக் குழுவினர் ஆவர். பிராமண மயமாக்கப் பட்டமையாலும், இந்து சமய அடிப்படையிலான பௌத்த சமயத்தினாலும் இந்துச் சமயத்தில் அவர்கள் கலந்தனர். பிராமண நூல்களினாலும், பௌத்த சர்யாபதங்களாலும்[65] இதனை உய்த்துணர முடியும். பின்னால் உள்ள குறிப்பு டோமாக்கள், நிஷாதர்கள், அவர்களின் பெண்டிர், காபாலிகர்கள் பற்றிக் குறிக்கிறது. அவர்கள் கிராமங்களுக்கு வெளியே பொதுவாகக் குன்றுகளில் வசித்ததோடு பிராமணர்களுக்குத் தீண்டத்தகாதவர்கள் ஆயினர். சில இனமரபுக் குழு மக்கள் முழுவதுமாக இந்துச் சமயத்தில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பது வெளிப்படை. ஏனென்றால் அவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலிருந்தமையால் தீண்டத் தகாதவர்கள் நிலைக்குத் தள்ளப்பட்டனர். அல்லது ஒரு வேளை பிராமணர்களின் வெற்றிக்கும் இந்து சமயத்தவராக்குவதற்கும் தடையாக அவர்கள் விளங்கினர்கள் எனலாம். அவர்கள் நில உரிமையைக் கிராமத்தில் இழந்து வெளியே வாழும் நிலைமைக்குள்ளானார்கள். ஒரு வேளை இது கைவர்தர்களுக்கும் ஏற்பட்டிருக்க வேண்டும். அவர்கள் 11 ஆம் நூற்றாண்டில் பாலர் மன்னர்களால் இறுதியாக அடக்கி ஆட்கொள்ளப்பட்டனர். தொம்பி பதசாரியத்தில்[66] முக்கிய மக்களாகத் தோற்றமளிக்கின்ற தொம்பா இனமரபுக் குழுவினரிடத்தும் இது உண்மையாயிருக்கக்கூடும். பண்டைய இடைக் காலத்தில் பிராமணமயமாக்குதல் மிகப் பெருமளவில் ஏற்பட்டதால் கணிசமான அளவிற்குத் தீண்டத்தகாத சாதிகள் பெருகின. முந்திய காலங்களில் சில வகையான வேடுவர்கள், கைவினைஞர்கள் தீண்டத்தகாதவர்கள் எனப்பட்டனர். ஆனால் இப்போது சில உழவுச் சாதியினரும் இந்நிலைக்கு இழிவு படுத்தப்பட்டனர். இந்நிலை அரசர்களுக்கும், புரோகிதர்களுக்கும் உழவுத்தொழிலின் மீது கொண்ட வெறுப்பினால் ஏற்பட்டிருக்க முடியாது. மற்றொரு பக்கத்தில் பார்க்கும்போது பெருமளவு எண்ணிக்கையுள்ள சூத்திரர்கள் தீண்டத்தகாதவர்கள் என்ற நிலைக்குத் தாழ்ந்ததானது மற்ற சூத்திரர்களுக்கு நிறைவை தந்திருக்க வேண்டும். ஏனென்றால் நடைமுறையில் சமுதாய படி முறையில் வைசியர்களுடைய இடத்தை அவர்கள் பிடித்துக் கொண்டனர்.

கைத்தொழில்கள், சாதிகளாக மாற்றப்பட்டமையும், சூத்திரசாதிகளின் பெருக்கத்திற்கு வழி வகுத்தமை மற்றொரு

குறிப்பிடத்தகுந்த ஒன்ருகும். வாணிபமும், வர்த்தகமும் குப்தர்களுக்குப் பிற்பட்ட காலத்தில் தளர்வடைந்தமையால் தொழிற் சங்கங்கள் செயலற்று, அசைவின்றி, மரபு வழியிலாகிப் பெரிதும் தலப்பண்புடையதாகியன. நடைமுறையில் வர்த்தகமும், சங்கங்களும் படிப்படியே, சாதியைப் போல பிறர் புகமுடியாதனவாகி எல்லா நடைமுறைச் செயல்களுக்கும் அமைந்தன. ஆபாரகர் என்பார் பிருஹஸ்பதியினை மேற்கோளாகக் காட்டி தொழிற் சங்கங்களின் தலைவர்களாக விளங்கியவர்கள் தவறு செய்தவர்களைத் தண்டிக்கவோ கைது செய்யவோ விலக்கி வைக்கவோ உரிமை பெற்றிருந்தனர் என்று குறிப்பிடுகின்ருர்.[67] நாபிதர் (நாவிதர்), மோதகர் (இனிப்பு செய்பவர்), தாம்பூலிகர் (தாம்பூலம் செய்பவர்), ஸ்வர்ணகாரர் (பொற்கொல்லர்), மாலாகாரர் (பூவினைஞர்), சங்ககாரர் (சங்கு வினைஞர்), சூத்ரகாரர் (அளவையாளர்), சித்ரகாரர் (ஓவியர்) ஆகியோர் முதற்குடியினரைப் போன்று இடைக்கால நூல்களில் கலப்புச் சாதியினர் போலக் காணப்படுகின்றனர்.[68] அவர்கள் பல்வேறு தொழில்களினடிப்படையில் சாதிகளாக உருவாயினர். பண்டைய நூல்களில் தொழிற்கிராமங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அவை இப்போது இடைக்காலப் பட்டயங்களில் இடம் பெறுகின்றன. தெளிவாகத் தெரிகின்ற குயவர் சாதியைச் சார்ந்த கும்பாரபத்திரகா[69] எனப்படும் இரண்டு கிராமங்கள் பற்றி இவ்வாறு கேள்விப்படுகிருேம். இக்காலத்தில் தனித்துறைப் பயிற்சி என்ருல் ஆற்றல் திறமை எனவும் அது எங்கிருந்தும் எப்போதும் பெறத்தக்கது எனப்படுகிறது. ஆனல் இடைக்கால தனித்துறைப் பயிற்சி என்பது ஆண்டையுடன், அவருடைய இடத்திலேயே, தொழிலைச் செய்ய அவருடைய குடும்பத்துடன் இணைந்து இருப்பது ஆகும்.

சாதிகளின் எண்ணிக்கை உயர்வகுப்பார், தாழ்ந்த வகுப்பாரிடையே அதிலும் குறிப்பாகத் தக்காணத்திலும் தென்னிந்தியாவிலும் இடைக்காலத்திலும் பெருகிடத் தூண்டுகோலாய் அமைந்த காரணக்கூறு சமயத் தொடர்புகளே ஆகும். இடைக்காலத்தில் தனிப்பிரிவுகளின் பெருக்கத்திற்கு, சாதிகளுக்கு இடையே ஒன்றுபட்ட போக்கு நெருக்கமானது. தனிப்பிரிவுகள் சாதிக்கு உதவின. சைவம், வைணவம், பௌத்தம், சமணம் ஆகிய இவற்றில் ஒவ்வொரு சமயமும் எண்ணிறந்த தனிப்பிரிவுகளாகப் பெருகின. கொள்கைகளின் பெரும் வேறுபாட்டினுல் அன்றிச் சடங்குகளினுலும் சிறு வேறுபாடுகளினுலும், உணவு, உடை ஆகியவற்றின் வேறுபாடுகளினுலும் பிளவுற்ற அது மண்டலப் பழக்கவழக்கங்களால் காத்துப் பேணப்பட்டது. சில சமயாசிரியர்கள் இடம் விட்டு இடம் சென்று கொண்டி

ருந்தனர். ஆனல் பெரும்பாலான பலர் மடங்களுடனும், சமய நோன்பினர் வாழிடம், கோயில்கள் ஆகியவற்றுடன் சேர்ந்து வாழ்ந்தனர்.

பௌத்த சமயம் பதினெட்டுப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. கர்நாடகத்தில் சமணம் ஏழு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு சமயப்பிரிவும் ஓர் ஆசிரியர் அல்லது குருவினல் வழி நடத்தப்பட்டது. அவர்கள் கேள்வி முறையில்லாத கட்டுப் பாட்டினைத் தம்மைப் பின்பற்றுவோரிடத்தும் எதிர்பார்த்தனர். நிலத்தை உழுபவர்க்கும், அரசனுக்குமிடையே குடியாள் செயல்பட்டதைப்போல, அடியார்களுக்கும், உயர்ந்த ஆண்டவனுக்குமிடையே குரு செயல்பட்டார். சமயப்பிரிவின் உறுப்பினர்கள் நாளடைவில் சாதிபிரிவின் உறுப்பினர்கள் போலச் செயல்பட்டனர். தம் சமயப்பிரிவில் தம்மை இறுத்திக் கொண்டு பிற சமயப்பிரிவினருடன் கலந்துண்ணவோ, ஒன்று சேர்ந்து உட்காரவோ மறுத்தனர். இடைக்காலத்தின் முற்பகுதி யில் இச்சமயப் பிரிவினர் முழு வளர்ச்சி பெற்ற சாதியினரைப் போல நடந்து கொள்ளத் தலைப்பட்டனர். கர்நாடகத்தில் லிங்காயத்துக்கள், வீரசைவர்கள் ஆகியோரும் வடஇந்தியாவில் இராதாசுவாமிகள் தனிப்பட்ட சாதியினராக அமைந்தனர். ராஜஸ்தானத்திலும் மேற்கு இந்தியாவிலும் சமணர்கள் பெரிய சாதியாக பல துணைச் சாதிகளுடன் உருவாயினர். கிருஷ்ணனை வழிபட்ட கங்கைச் சமவெளியின் கோலாக்கள் இன அடிப்படை யிலே தெய்வீகத் தலைவனுடன் சம்பந்தமுடையவர்கள் என்று கருதித் தம்மை கிஸ்நாட்கள் என்று அழைத்துக் கொண்டனர்.

பிறப்பின் அடிப்படையில் அமைந்த சாதிப் பிரிவுகள், தனி உரிமைகளை ஒழித்திட வேண்டித் தோன்றிய சமயப் பிரிவுகள், சாதி முறையினலே விழுங்கப்பட்டு விட்டன என்பது வரலாற்றில் காணப்படும் முரண்பாடான நகைச்சுவையே. சமூகப் பொருளா தார நிலையில் அடிப்படையான மாறுதலின்று இது தவிர்க்க முடியாதது. ஏனென்ருல் தொடக்ககாலச் சீர்திருத்தக்காரர்கள், மாறுதலுக்குரிய ஆர்வத்திற்கும், கருத்தியல் பாங்கிற்கும், தம்மை நிலைபெறச் செய்ய உறுதியான அடிப்படைகளைக் கொண்டிருக்க வில்லை.

இந்தத் தற்போதைய மதிப்பீடு வட இந்தியாவில் முஸ்லீம் களுக்கு முற்பட்ட சமுதாயம் சில முக்கிய மாறுதல்களுக்குட் பட்டது என்பதனைக் காட்டுகிறது. வருண முக்கியத்துவம் கடந்த நிலமானிய வரிசைகளைச் சமப்பங்கீடில்லா நிலமும், இராணுவ அதிகாரமும் உயர்ந்த, கல்வி பெற்றோர்களை உருவாக்

கியது குறிப்பிடத்தக்கது. அடிக்கடி வழங்கப்பட்ட நிலக் கொடைகள், பிரிவுகள் ஆகியவை வருணு முறையில் எளிதில் விளக்கிவிட முடியாத நிலையினைப் பெற்ற காயஸ்தர்க்கள் எனப் படும் புதிய படித்த வகுப்பின் எழுச்சிக்கும், வளர்ச்சிக்கும் வழிவகுத்தன. சூத்திரர்கள் உழவர்களாக மாறுதல் அடைந்தமை யாலும், வைசியர்கள் சூத்திரர்களின் நிலையையடைந்தமையாலும், வருணு முறை மாற்றம் பெற்றது. இதன் விளைவாக வங்காளத் திலும், தென்னிந்தியாவிலும் புதிதாக நிறுவப்பட்ட பிராமணிய அமைப்பு பிராமணர்களுக்கும், சூத்திரர்களுக்கும் மட்டுமே ஆயிற்று. மிகவும் குறிப்பிடத் தகுந்த வளர்ச்சி சாதிகளின் பெருக்கமேஆகும். அது பிராமணர்கள், காயஸ்தர்கள், க்ஷத்ரியர்கள் அல்லது ராஜபுத்ரர்கள், எல்லாவற்றிற்கும் மேலாகச் சூத்திரர்களை யும் பாதித்தது. எல்லையில்லாக் கலப்புச் சாதிகளின் எண்ணிக்கை வளர்ந்தது. தீண்டத் தகாத சாதிகளும் பெருமளவில் அதிக ரித்தன. இத்தகைய சமூக மாற்றங்களை கட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரப் பிரிவுகளினுல் வளர்க்கப்பட்ட நிலமான்ய தலப் பண்புகளில் ஆழ்ந்த உறவினடிப்படையிலேயே புரிந்துகொள்ள இயலும். அப்பொருளாதாரப் பிரிவுகள் நிலத்தின்பால் தீவிர மான முன்னீடுபாட்டின் அடிப்படையிலும், இன மரபுக்குழு மக்கள் வெற்றியின் மூலமாகவும், பிராமணர்களுக்கு நிலக்கொடை களின் மூலமாகவும், பிராமணீயப் பிரிவில் ஈர்த்துக் கொள்ளப் பட்டன.

## அடிக்குறிப்புகள்

1 ஆர். எஸ். சர்மா, *Indian Feudalism: C. 300–1200* (கல்கத்தா, 1965) அத். 5

2. ரிச்சர்டு பாங்குர்ஸ்ட்டு, *An Introduction to the Economic History of Ethiopia*, பக்கங்கள் 46-7 (லண்டன், 1961).

3. VI. 3. 105.

4. CII, iii, எண் 60, II. 12–3.

5. எபி. இண்., iii, எண் 40. எபிகிராபிகா கர்நாடிகா, Vii ஷிகாபூர் தாலுகா, 20a.

6. எபி. இண்., xx, எண் 14, பி. செப்பேடுகள், 1. 19.

7. எபி. இண்., xxx, எண் 30, 11. 8, 28.

8. அதே நூலில், 1. 6.

9. *Indian Feudalism*, பக். 54-6.

10. எபி. இண்., xxxv, எண் 17. இக்குறிப்பிற்காக டாக்டர் பி. என். எஸ். யாதவாவிற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

11. எபி. இண்., xxx, எண் 17.

12. CII, iii, எண் 80. 1-10.

13. *Indian Feudalism*, பக். 118-9.

14. பட்குநாத் பட்டாச்சார்யா, *The Kalivaijyas*, ப. 67, (கல்கத்தா 1943); பி. வி. கானே, *History of Dharmasastra*, iii, 953, 955.

15. கானே, மேலே பார்க்கப்பட்டது, iii, 934.

16. *Alberuni's India*, பதிப்பாசிரியர் எட்வர்டு சி. சச்சாவ் (டெல்லி, 1964), ii, 134-5.

17. பி. என். சர்மாவின் *Social Life in Northern India*, (கி. பி. 600-1000), (டெல்லி, 1966), ப. 12 மேற்கோளாகக் காட்டப்பட்டது.

18. கானே, மேலே பார்க்கப்பட்டது, iii, 953.

19. தேவிபாகவதம், ஆர்.சி. ஹஸ்ராவினுல் குறிப்பிடப்பட்டது. *Studies in Upapuranas*, ii, 325. இக் குறிப்பிற்காக டாக்டர் பி. என். எஸ். யாதவாவிற்கு நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

20. பிரஹன்ஞரதிய்ய புராணம் 22.11.

21. iii, 201.

22. ஸ்கந்தபுராணம். பிரமகாண்டம், II. 40. 5.

23. xxix, 80–2.

24. 81. 2-12.

25. 71. 33-4, 39; வி. எஸ். அகர்வாலா, ஹர்ஷசரிதா—ஏக்-சான்ஸ்கிரிட்டிக் அத்யாயன். பக். 178, அடிக்குறிப்பு 3, (பாட்ஞ, 1953).

26. அகர்வாலாவினுல் மேற்கோளாகக் காட்டப்பட்டது. மேலே குறிப்பிடப்பட்டது. ப. 203.

27. பி. கே. ஆசாரியா, *Hindu Architecture in India and Abroad, Manasara Series*, vi, 125 (ஆகஸ்போர்டு, 1946)., நூலின் 45, 46 ஆம் அத்தியாயத்தில் இது காணப்படுகிறது.

28. பி. கே. ஆசாரியா, மேலே பார்க்கப்பட்டது, vi, 125.

29. பெனேய்டோஷ் பட்டாச்சார்யா, *The Indian Buddhist Iconography*, அத்தியாயங்கள் 1 & 2 (கல்கத்தா, 1958).

30. *Indian Feudalism*, பக். 23-3, 99.

31. *Aparajitaprccha*, 81. 21-4.

32. *Inscriptions of Bengal*, iii, பதிப்பாசிரியர் என். ஜி. மஜூம்தார் எண் 5, வரி. 36. (இராஜ்ஹாஹி, 1929)

33. *Indian Feudalism*, பக். 153-4.

34. கானே, மேலே பார்க்கப்பட்டது, ii, 77.

35. எபிகிராபிகா இண்டிகா, xv, எண். 19.

36. I, 322.

37. IV, 620ff; VIII 560 ff.

38. பி. என். சர்மாவினுல் மேற்கோளாகக்காட்டப்பட்டுள்ளது. மேலே பார்க்கப்பட்டது.

39. டி. வாட்டர்ஸ், *On Yuan Chwang's Travels in India*, பதிப்பாசிரியர் டி. ரைஸ் டேவிட்ஸ், எஸ் டபிள்யூ. புஷல், இரண்டு தொகுதிகள் (இலண்டன், 1904–05), i, 168.

40. சச்சாவ், i, 101.

41. நகரகாண்டா VI. 242. 31.

42. III, 554.

43. பிரம்மகாண்டா, II. 39. 291–2.

44. சச்சாவ், ii, 136.

45. *Bengalir Itihasa* (ஆதிபருவம்) பக்கம் 343, (கல்கத்தா—1948).

46. ஆர். சி. மஜூம்தார் (பதிப்பாசிரியர்), *The History of Bengal*, i (Dacca, 1943), 558–9.

47. புஷ்பா நியோகி, *Brahmanic Settlements in Different sub-divisions of Bengal* (கல்கத்தா, 1967) ப. 55.

48. *Inscriptions of Bengal*, iii, எண் 4, வரி. 3.

49. நியோகி, மேலே பார்க்கப்பட்டது, ப. 33.

50. பிரம்மகாண்டம், x. 14; 168.

51. எம். ஜி. பிரதான், *The Political System of the Jats of Northern India*, பின்னிணைப்பு 1, ப. 249. (ஆகஸ்போர்டு 1966).

52. அதே நூலில், ப. 254-5.

53. டி. ஆர். பண்டார்க்கர், "Foreign Elements in the Hindu Population," *Journal of Ancient Indian History*, i, 301-3.

54. x, 1-51.

55. பிரம்மகாண்டம், x. 14–136.

56. II. 81-2.

57. எபிகிராபிகா இண்டிகா, i, எண். 38, வரி. 22.

58. பகவான்சிங் சூரியசுவாமி, *The Abhiras: Their History and Culture*, பக். 39-40 (பரோடா, 1962).

59. அதே நூலில், ப. 40.

60. CII, iv, எண் 99, 1. 28.

61. டி. ஆர். பண்டார்க்கர், மேலே பார்க்கப்பட்டது, 286-8

62. பிரம்மகாண்டம், X. 17–136.

63. வாசுதேவ உபாத்யாயாவினுல், *Socio-Religious Condition of North India* (கி. பி. 700-1200)-வின் மேற்காளாக. காட்டப்பட்டது. (வாரணசி, 1964) ப. 92, அடிக்குறிப்பு எண் 3 & 4.

64. சச்சாவ், i, 101-2.

65. அடிந்திர மஜூம்தார், *The Caryapadas* ப. 10, (கல்கத்தா, 1967).

66. அதே நூலில் பக். 48—9.

67. பி. பி. மஜூம்தாரின் *Socio-Economic History of Northern India 1030-1194* A. D.) ப. 211. (கல்கத்தா, 1960)

68. பிரம்மவைவர்த்த புராணம், பிரம்மகாண்டம், X, 17-136.

69 புஷ்பநியோகி, மேலே பார்க்கப்பட்டது, ப. 53.

## சுருக்கக் குறியீடுகள்

CII *Corpus Inscriptionum Indicarum*, i-iii, லண்டன், 1888-1929; iv, உதகமண்டலம், 1955.

எபி. இண். *Epigraphia Indica*, கல்கத்தா, டெல்லி.